யங் இந்தியா.

12

ஜூன், 1929

Y31ைஉ,N26
N29·4·12
199389

Regd. No. M 2475. DECEMBER Vol IV—12

“கிராம அபிவிருத்தி”

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டி கலெக்டர்,
ஆபீஸ் : மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV டிஸம்பர், 1929 நெ 12

...OF THE ... JAN 1930

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 109. | வியவஸாய விஷயங்களில் ஆராய்ச்சி | 289 |
| 110. | குடியை நிறுத்துவதற்காகப் பிரச்சாரங்கள் | 290 |
| 111. | கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் | 292 |
| 112. | கிராம ஜனங்களிற்குக் கல்வி முறை | 293 |
| 113. | மனதின் நிலையும் நோயும் | 295 |
| 114. | கிராமச் சீரமைப்பு சம்மந்தமாக மகாத்மா காந்தி அவர்கள் கூறியிருப்பது | 296 |
| 115. | அலுமினியமும், அதன் தீமையும் | 298 |
| 116. | அஜீரணத்திற்குக் காரணம் | 300 |
| 117. | காது ... ... ... ... | 302 |
| 118. | தீர்க்காயுளையுடைய சன்னியாசிகள் | 302 |
| 119. | பாலாறு ... ... ... ... | 302 |
| 120. | பாரெஸ்டு பஞ்சாயத்துகள் | 305 |
| 121. | கவிபாஸரின் ஸ்வப்ன வாஸவதத்தம் | 308 |
| 122. | வர்த்தமானக் குறிப்பு ... ... ... | 315 |
| 123. | மதிப்புரை ... ... ... ... | 317 |
| 124. | நமது மாற்றுப் பத்திரிகைகள் | 318 |



| | | |
|---|---|---|
| வருடச் சந்தா : | உள்நாடு ரூ 3 | வெளிநாடு ரூ 4 8 0 |
| தனிப்பிரதி : | ,, அணா 6 | ,, அணா 8 |

ஆச்சரியமுள்ளது !                                                    அதிசயிக்கத்தக்கது !!

## தாது புஷ்டிக்குத் தங்க ரேக்கை

சிததானந்த சிட்டுக்குருவி லேகியத்தில் சாப்பிடுங்கள்.

தாதுபுஷ்டிக்கு நிகரான வேறு மருந்து ஒன்றுமேயில்லை. இதை காலை மாலை நோய் பலம்போல் ஒன்றிரண்டு மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தை கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்யும். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்யம், இந்த பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யவும் கிழத்தனத்தை நீக்கி வல்லமை அடையச் செய்வதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல் சஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு சூலை, கிரந்தி முதலிய சகல கர்ம வியாதிகளும் நீக்கும், பத்தியமில்லை, 100-நாளைக்கு தங்க ரேக்கும் சித்தானந்த சிட்டுக்குருவி லேகியமும் ரூபா 100. 50 நாளைக்கு ரூபா 50, 25 நாளைக்கு ரூபா 25, சிங்கப்பூர் பினாங்கு F. M. S. வாசிகள் சார்ஜு ரூபாய் 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும். அல்லது அட்வான்சு ரூபா 5 அனுப்பவும்.

காருண்ய கவர்மெண்டாரால் பரீக்ஷிக்கப்பட்டது

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளி பதக்கங்களும் பரிசுபெற்றது.

## சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த அருமையான வீரதத்துவ லேகியத்தை உபயோகித்து இழந்த வீரியத்தத்துவத்தையும் ஆண் சிங்கத்திற்கு ஒப்பான தேக பலத்தையும், மின்னுள் இன்பத்தையும், புருஷ கெம்பீரத்தையும், எழுவகை தாதுக்களின் திடத்தையும் உலக இல்லற வாழ்க்கையின் அநுகூலத்தையும் பெற வில்லை என்று ருஜுப்படுத்தும் கனவான்களுக்கு எங்கள் மருந்துசாலையிலிருந்து ரூபா 5000 வெகுமதி அளிக்கப்படும்.

மேலே சொல்லும் 5000. ரூபா வெகுமதிக்காக 14-8-20-ல் எங்கள் பேரால் கிரயமானதும் தற்காலம் ரூபா பதினையிரம் மதிப்புள்ளதும், கவர்மெண்டின் சட்டபடி 10 ரூபா ஸ்டாம்பின்பேரில் எழுதி சர்க்கார் டாக்ளாத்தில் 933-குழி விஸ்தீரண நஞ்சை வகைராக்களை 20-9-20-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தை ஜாமீனாக வைத்து இருக்கிறோம். ஆனதால், கனவான்களே ! சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தை ஒரு முறை பரிசோதித்துப் பாருங்கள்.

ஜெயம் பெறுவீர்கள் !                    உள்ளபடி                    ஜெயம் பெருவீர்கள் !!

இதன் கிரயம்                                        [எவ்வித பத்தியமுமில்லை]

96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை ரூபா ... ... 15-0-0.
48 வேளை 24 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 8 0-0.
24 வேளை 12 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 4-4-0.

சவுத் ஆப்ரிக்கா, டிரான்சிவால், சுமத்ரு, ஜாவா, சிலப்பீஸ், கொச்சிங், சீனு, பிஜி முதலிய வெளிநாட்டு ஆர்டர்கள் பார்சல் செலவுக்கு ரூபா 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும்.

## தாமரை லிங்கத் தைலம்.

கனவான்களே ! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவுகளின் மீது தேய்த்த உடன் காங்கள் இது வரை பாராத ஆச்சரியத்தை தரும்படியான கருவிகளைப் பெருகச்செய்து நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகு மென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகர பாட்டில் விலை ரு. 1 வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம்.

எங்கள் விலாசம்:— **ஸாஹேறபியா மருந்துசாலை,**

நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது பத்திரிகை பேரை குறிப்பிடவும், கேட்லாக் இனும்.

# 'கிராம அபிவிருத்தி' (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்,

சுக்கில௵ மார்கழி மீ

| டிசம்பர் ஜனவரி | மார்கழி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | சது 31-40 | ரோ54-15 | சி60 | மாடுவாங்க |
| 16 | 2 | தி | ○பவு26-40 | மிரு50-45 | சி60 | வடக்கு பிரயாணம் |
| 17 | 3 | செ | பிர 21-42 | திரு 46-41 | ம46சி | ஆருத்ரா தரிசனம் |
| 18 | 4 | புத | துதி 15-50 | புன42-46 | சி60 | மேற்குதெற்குபிரயாணம் |
| 19 | 5 | வி | திரு 10-12 | பூச 38-49 | சி60 | நூதன வியாபாரம் |
| 20 | 6 | வெ | சவு 4-40<br>பஞ் 54-21 | ஆயி 34-39 | சி60 | கரிநாள் |
| 21 | 7 | சனி | சஷ் 53-31 | மக 30-22 | அ30சி | யந்திரங்கள் ஆரம்பிக்க |
| 22 | 8 | ஞா | சப் 49-40 | பூர 29-15 | சி29அ | மேல் கிழக்கு பிரயாணம் |
| 23 | 9 | தி | அஷ் 46-19 | உத் 26-14 | சி60 | கரிநாள் |
| 24 | 10 | செ | நவ 43-21 | அஸ் 24-24 | சி60 | விவகாரம் செய்ய |
| 25 | 11 | புத | தச 41-42 | சித் 24-39 | சி60 | கரிநாள் |
| 26 | 12 | வி | ஏகா 42-47 | சுவா25-24 | அ25சி | |
| 27 | 13 | வெ | துவா 2-37 | விசா27-47 | சி60 | பிரயாணம் நீக்க |
| 28 | 14 | சனி | திர 45-41 | அநு32-19 | சி60 | ஆனி கெர்ப்போட்டம் |
| 29 | 15 | ஞா | சது 50-38 | கே 36-18 | ம36அ | யந்திர பூஜை செய்ய |
| 30 | 16 | தி | ●அ54-50 | மூல41-40 | ம41சி | ஆடி கெர்ப்போட்டம் |
| 31 | 17 | செ | பிர 58-40 | பூரா48-56 | சி48ம | நாற்றுநட |
| 1 | 18 | புத | துதி 60-0 | உத்ர54-39 | அ54சி | ஆவணி கெர்ப்போட்டம் |
| 2 | 19 | வி | துதி 4-18 | திருவே60 | சி60 | காலை7க்குமேல்விவாஹம் |
| 3 | 20 | வெ | திரு 9-42 | ஷ்டி1-41 | ம2சி | புரட்டாசிகர்ப்போட்டம் |
| 4 | 21 | சனி | சது 13-49 | அவி 7-39 | சி8அ | வடக்கு பிரயாணம் |
| 5 | 22 | ஞா | பஞ் 18-41 | சத12-40 | சி60 | ஐப்பசி கெர்ப்போட்டம் |
| 6 | 23 | தி | சஷ் 21-39 | பூரட்14-39 | 60சி | நாற்றங்கால்நட |
| 7 | 24 | செ | சப் 22-2 | உத் 16-18 | அ16சி | மரசாமான்வாங்க |
| 8 | 25 | புத | அஷ் 21-8 | ரே 19-15 | ம60 | கார்த்திகை கெர்போட் |
| 9 | 26 | வி | நவ 20-50 | அசு 20-9 | அ20சி | சுபம் விலக்க [டம் |
| 10 | 27 | வெ | தச 18-19 | பர 17-40 | சி60 | மார்சழி கெர்போட்டம் |
| 11 | 28 | சனி | ஏகா 14-27 | *கா16-49 | அ17சி | வைகுண்ட ஏகாதசி |
| 12 | 29 | ஞா | துவா 10-10 | ரோ 14-39 | சி60 | வடகக்கு பிரயாணம் |
| 13 | 30 | தி | திர 5-47 | மிரு11-11 | சி60 | போகிபண்டிகை |

## இராகுகாலம் முதலியன.

[சூரியன் உதயம் 6 மணிக்கு ஆகும் நாட்களுக்கு]

| வாரங்கள் | இராகு காலம் | குளிகை காலம் | எமகண்டம். |
|---|---|---|---|
| ஞாயிறு | மாலை 4½—6 | மாலை 3—4½ | மாலை 12—1½ |
| திங்கள் | காலை 7½—9 | மாலை 1½—3 | காலை 10½—12 |
| செவ்வாய் | மாலை 3—4½ | மாலை 12—1½ | காலை 9—10½ |
| புதன் | மாலை 12—1½ | காலை 10½—12 | காலை 7½—9 |
| வியாழன் | மாலை 1½—3 | காலை 9—10½ | காலை 6—7½ |
| வெள்ளி | காலை 10½—12 | காலை 7½—9 | மாலை 3—4½ |
| சனி | காலை 9—10½ | காலை 6—7½ | மாலை 1½—3 |

1895-ம் வருஷம் ஸ்தாபிக்கப் பட்டது

பழமையான கரூர் ரத்ன வியாபாரிகள்.

நாம் வைரங்கள் முதலியன விற்கும் போதே "காரண்டீ" செய்கிறோம். இஷ்டமிராவிடில் சரக்குகளை மாற்றிக்கொள்ளவாவது திருப்பி பணம் பெற்றுக் கொள்ளவாவது செய்யலாம்.

எங்களுடைய உத்திரவாதமே உங்களுக்கு ஒரு பொருப்பாகும். நீங்கள் நம்மிடம் தபால் மூலமாகவும் வியாபாரம் செய்யலாம்.

நம்முடைய வெள்ளிதினுசுகள் சுத்த வெள்ளியினால் கையினால் செய்யப் பட்டவை. அவைகள் கனமாகவும், கண்ணியமாகவும் நூதன தினுசுகளாக வுமிருக்கும்.

இந்த வியாபாரத்தில் உங்களுக்கு 35 வருஷங்களுக்கு மேல் நல்ல அனுபவ முண்டு.

ஆதலால் நம்முடைய அனுபவத்தால் நீங்கள் லாபமடைய இதுவே நல்ல தருணம்.

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன, வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட். மதராஸ்.

199389

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ்: 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV டிசம்பர் 1929. நெ. 12

## வியவஸாய விஷயங்களில் ஆராய்ச்சி.

1927-28-ம் வருஷத்திய பூஸா வியவஸாய ஸ்தாபனத்தின் பிரகடனத்தைப் படித்துப் பார்த்தோம். அப்பிரகடனத்தில் விவரிக்கப் பட்ட விஷயங்களெல்லாம் வியவஸாயிகளால் கவனிக்கப் பட வேண்டியவை. 1927-28ம் வருஷத்தில் மழை குறைவு. ஆனால் ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் மப்பும் மந்தாரமுமாயிருந்தன. அக் காரணத்தினால் வஸந்த காலப் பயிர்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. கோதுமைப் பயிரும் நன்றாய் வளர்ந்து வரக் கூடவில்லை.

எருசம்பந்தமாயும், கரும்புச்சார், வெல்லம் இவைகளின் சம்பந்தமாயும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. போடாஷ் எருக்கள் உபயோகப் படுத்தப் பட்டதில் கரும்புகளில் சாரும், சக்கரை அம்சமும் அதிகமாக ஏற்பட்டனவாம். குளுகோஸ் அம்சம் குறைவாக ஏற்பட்டதாம். அம்மோனியா ஸல்பேட்கள் உபயோகிக்கப்பட்டதில் குளுகோஸ் அதிகமாகவும், சக்கரை அம்சமும், சாரும் குறைவாகவும் ஏற்பட்டனவாம்.

மாங்காய்கள் காய்களாகவும், செங்காய்களாகவும் 48 டிகரி டெம்பரெச்சரில் (அதாவது அதிக குளிர்ச்சியில்) வைக்கப்பட்டுப் பார்க்கப்பட்டன. ஒரு மாசம், இரண்டு மாசங்கள் வரையில் அவைகள் இவ்விதமாக வைக்கப்பட்டுப் பார்க்கப்பட்டன. 15 நாள்கள் வரையில் இவ்வித டெம்பரச்சரில் வைக்கப்பட்டுப் பின்பு 88 டிக்ரி டெம்பரச்சரில் வைக்கப்பட்டால் அவைகள் பழுக்கின்றனவென்றும், பழுத்த பழங்கள் நிறத்திலும், ருசியிலும், சாதாரணமாய்ப் பழுக்கிற பழங்களைப் போலிருக்கின்றனவென்றும், அவைகளை மூன்று வாரங்கள் வரையில் கெட்டுப்போகாமல் வைத்துக் கொள்ளலாமென்றும், ஆராய்ச்சிகளால் அறியப்பட்டது.

மாட்டு அபிவிருத்தி முயர்ச்சிகளும் நடத்தப் படுகின்றன. அவ்வித முயர்ச்சிகள் பெங்களூர், வெல்லிங்க்டன் இவ்விடங்களிலுள்ள மாட்டுஸ்தாபனங்களிலும் நடத்தப் படுகின்றன. அஸ்தாபனங்களில் இரு ஜாதிப் பசுக்கள் நல்ல, சுதேசப் பால் ஜாதி எருதுகளால் சினைப்படுத்தப் படுகின்றன.

ஆநந்திலுள்ள வெண்ணை யுற்பத்தி ஸ்தாபனத்தில் நல்ல வெண்ணை, நெய், கட்டிப்பால் முதலியவை உண்டாக்கப் படுகின்றன. பெல்லாரி ஜெயிலிலும் இவ்வித ஸ்தாபனமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## குடியை நிறுத்துவதற்காகப் பிரச்சாரங்கள்.

[ராவ்பஹதூர் கே. எஸ். வெங்கட்டராம ஐயர் அவர்கள் எழுதியது.]

நமது கவர்மெண்டார் கிராமங்களில் மதுவிலக்கின் நிமித்தமாக உபந்நியாஸங்களை நடத்துவதற்கு நாலுலக்ஷ ரூபாயைப் பகுத்து வைத்திருக்கிறார்கள். அப்காரி இலாகா மந்திரியவர்கள் இது விஷயமாய் ஒருமாஹாணா ஸபையைக் கூட்டியிருக்கிறார். இது தவிர ஜில்லாச் சபைகளும் உண்டாக்கப் பட்டிருக்கின்றன. ஜில்லாச் சபைகளால் பிரச்சாரகர்கள் நியமிக்கப் படுவார்களாம். உபந்நியாஸ விவரங்களும் ஸ்தலங்களும் அவைகளால் விதிக்கப்படுமாம்.

அமெரிக்காவில் மதுபானம், பிரச்சாரங்களினாலும், உபந்நியாஸங்களினாலும் அடங்கிற்று. நமது தேசம் அமெரிக்காவைப்போன்றதல்ல. நமது தேசத்தில் கிராமங்களில் வியவஸாய ஊழியர்களும் இதர ஊழியர்களும்தான் கள்ளுக் கடைக்குப் போகிறவர்கள். முக்கியமாய் ஆதி திராவிடர்கள்தான் போகிறார்கள். தென்ன மரவரி உயர்த்தப்பட்ட பின்பு கள்ளின் விலை ஏறிப்போய் விட்டது. இவ்வித விலைக்கு வேண்டிய பணத்தை மேற்சொல்லிய ஜனங்கள் மிராசுதாரர்களிடமிருந்து தான் அடைகிறார்கள். மிராசுதார்கள் ஆள்களுக்குக் கள்ளுப் பணத்தைக் கொடுக்காமல் போனால் ஆள்கள் வேலைக்கு வர மாட்டார்களென்பது நிச்சயமான விஷயம். கள்ளுக்குடியால் உடம்பில் ஏற்படும் வலியானது போய் விடுகிறதென்று அவ்வாள்கள் சொல்லுகிறார்கள். மேலும் அவர்கள் கூலியை நெல் ரூபமாக வாங்கிக்கொண்டால் அதை அவர்கள் கள்ளுக் கடைக்குக் கொஞ்சதூரத்தில் கள்ளுக்கடைக்காரனின் பெண்சாதியால் வைக்கப்பட்டிருக்கும் கடையில் கொடுத்து ஓலை ரசீதைப்பெற்று அதைக்கள்ளுக்கடையில் ஆஜர் படுத்திக் கள்ளை வாங்கிக் குடிக்கிறார்கள். ஆகவே, பிரச்சாரங்களினாலும், உபந்நியாஸங்களினாலும் குடியை நிறுத்தக் கூடும் என்பது ஒரு ஸரியான யோஜனையல்ல. கள்ளுக் குத்தகைக்காரர்கள் வரும்படிக்குக் கிராம ஊழியர்களைத்தான் நம்பியிருக்கிறார்கள். தென்னந்தோப்



புகளின் சொந்தக்காரர்களும் 6 மாச காலத்திற்கு மரம் ஒன்றுக்கு 6 லிருந்து 8 ரூபாய் வீதம் குத்தகைகளை யடைகிறார்கள். மரமேறுகிற சாணார்களும் ஜீவிக்கவேண்டியிருக்கிறது. உபந்நியாஸங்களுக்கு மேற்சொல்லியவர்கள் ஒருவரும், வர மாட்டார்கள். ஆனால் ஸர்க்கார் கணக்குகளில் பிரச்சாரர்களின் ஸங்கியைகளும், அவர்கள் போய் வந்த கிராமங்களின் ஸங்கியைகளும், அவர்கள் நடத்திய உபந்நியாஸ ஸங்கியைகளும் நிறைந்திருக்கும். மதுபானம் குறையாது. ஆனால் கவர்மெண்டாரால் பகுத்து வைக்கப் பட்டிருக்கும் 4 லக்ஷ ரூபாயும் மாஹாணாச்சபையாரின் சுற்றுப்பிரயாண சிலவுகளுக்காகவும், ஜில்லாச் சபையாரின் சுற்றுப் பிரயாண சிலவுகளுக்காகவும் பிரச்சாரர்களின் சம்பளங்களுக்காகவும் உபயோகிக்கப்பட்டுச் சிலவழிந்து போம்.

உபந்நியாஸங்களினாலும், துண்டு பத்திரங்களை வெளியிடுவதினாலுமே மதுபானம் நின்று விடாது. உபந்நியாஸங்களைக் கேட்பவர்களுள் குடிகாரர்களிருக்கிறதில்லை. அப்படிச் சிலர் இருந்தாலும் அவர்கள் அவைகளைச்சரிவர ஏற்றுக்கொள்கிறதில்லை. துண்டுப்பத்திரங்களை வெளியிடுவதால் பயன் ஒன்றும் ஏற்படாது. ஏனென்றால் கிராமங்களில் பயிர் ஊழியர்கள் அனைவரும் கல்வியற்றவர்களாதலால் அவர்கள் அவைகளைப்படித்துத் தெரிந்து கொள்ள முடியாது. நான் ஒரு வியவஸாயி. என்னுடைய கூலியாட்களை மதுபான வழக்கத்திலிருந்து திருப்ப என்னால் முடியவில்லை. நான் அவர்களைக்குடியை நிறுத்தும்படி போதித்தால் அவர்கள் நான் கள்ளுப்பணத்தை அவர்களுக்குக் கொடாமல் ஆதாயம் செய்து கொள்ளப்பார்க்கிறேன் என்று நினைக்கிறார்கள். ஆகவே, நான் கள்ளுக்குடியை நிறுத்துவோருக்குத் துணியைவாங்கிக் கொடுத்துவருகிறேன். இவ்விதமாக என்னுடைய ஆள்களில் 6 பெயர்களை மதுபான வழக்கத்திலிருந்து நீக்கியிருக்கிறேன். மற்ற ஆள்களும் கஷ்டவேலை செய்பவர்களுக்கு மதுபானம் அவசியமில்லையென்றே தெரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். கிராமங்களில் தென்னமரங்களையே கள்ளுக்குத்தகைக்கு விடுகிறதில்லை என்கிற ஏற்பாடு அமைவதற்கு தோப்புக்காரர்களுக்கு கள்ளுக்குத்தகையினால் வரக்கூடிய வரும்படிக்குப்பதிலாக நஷ்ட ஈடுப்பணம் கொடுக்கப்படலாம். கிராமங்களில் குடியை அடியோடு நிறுத்துகிறவர்களுக்கு வெகுமதிப் பணமும் கொடுக்கப் படலாம்.

என்னுடைய கிராமத்தில் கள்ளுக்கடையை வெகு தூர ஸ்தலத்

திற்கு மாற்றி வைத்தேன். ஆனால் என்னுடைய ஆள்கள் சாயந்திரத்தில் பொழுதிருக்கிற போதே வேலையை நிறுத்தி வீட்டிற்குப்போக ஆரம்பித்தார்கள். கள்ளுக்கடையில் கள்ளு செலவாகி விடும் என்றும் கள்ளுக்கடைக்காரன் அதில் தண்ணீரைக் கொட்டிவிடுவானென்ற எண்ணங் கொண்டும் அப்படிச்செய்யத் தொடங்கினார்கள். ஆகவே நான் அந்தக்கடையை பழய இடத்திற்கே திரும்பிக் கொண்டு வரும்படியாய் நேரிட்டது. நான் தென்னமரங்களைக் கள்ளுக்குத்தகைக்கு விடுகிறதில்லை யாதலால் என்னுடைய ஆட்களுக்கு கடைக்காரன் நல்ல கள்ளைக் கொடுக்கிறதில்லை. நான் தென்ன மரங்களைக் கள்ளுக்குத்தகைக்கு விட்டால் அவன் நல்ல கள்ளை என் ஆள்களுக்குக் கொடுப்பானாம். கள்ளையும் அவர்கள் கடைக்கு வருகிற வரையில் வைத்து வைத்தும் கொடுப்பானாம். கடன் பேரிலும் அவர்கள் கள்ளை வாங்கிக் கொள்ளக் கூடுமாம்.

கவர்மெண்டாரால் பகுக்கப்பட்டிருக்கும் 4 லக்ஷ ரூபாய் திரவியம் பிரச்சாரத்தில் சிலவழிக்கப் பட்டால் மஹாத்மா காந்தியால் சேகரிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய்கள் எவ்வாறு சிலவழிந்தனவோ அதே விதமாக அதுவும் பயனில்லாமல் சிலவழிந்து போகும்.

## கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்.

கிராமப்பள்ளிக்கூட உபாத்தியாயர் அவர் எந்த கிராமப்பள்ளிக் கூடத்தில் உபாத்தியாயராக விருக்கிறாரோ அந்தக் கிராமத்திலேயே வஸிக்கவேண்டும். அவர் கிராம ஜனங்களோடு கலந்துகொண்டு அவர்களுக்கு எல்லா விஷயங்களிலும் நல்ல யோஜனைகளைச் சொல்லி அவர்களுக்கு ஒத்தாசையைச் செய்யவேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு கல்வியைக் கற்றுக்கொடுப்பதோடு வயதான ஆண் பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் தான் கற்றறிந்திருக்கிற ஞானத்தை போதிக்கவும் வேண்டும். அவர் எப்பொழுதும் கிராம முன்னேற்ற சம்பந்தமான கல்வியைச் சிரத்தையுடன் இடைவிடாமல் படித்து வர வேண்டும். சுகாதாரவிஷயங்களிலும், செல்வவிருத்தி விஷயங்களிலும், வியவஸாய விஷயங்களிலும், கூட்டுறவு விஷயங்களிலும் அவர் ஞானத்தை வஹித்து விருத்தி செய்து வர வேண்டும். அவர் உலகத்தில் நடைபெறும் பொதுஜன க்ஷேம இயக்கங்களைப் பற்றிய தினச்செய்திகளையும் பத்திரிகைகளின் மூலமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வித ஞானங்களைக் கிராம ஜனங்களுக்கு அவர் உபதேசித்து வர வேண்டும். பள்ளிக்கூட பிள்ளைகளுக்கும் கல்வி முறை மேற் கூறிய



கிராம அபிவிருத்தி வழிகளில் அவரால் செய்யப்பட வேண்டும்.

கிராமப்பள்ளிக்கூட உபாத்தியாயர் கிராமக் கக்ஷிகளில் சம்பந்தப் படக்கூடாது. கிராமத்திலுள்ள சிறந்த வியவஸாயியைக் கொண்டு வியவஸாய விஷயங்களில் போதனைகளைக் கிராமப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு நடத்த வேண்டும். அப்படிப் பட்ட போதனைகளுக்காக ஒரு வியவஸாய முயர்ச்சி நிரூபண தோட்டமொன்று கிராமங்களில் அமைக்கப்பட வேண்டும். உபாத்தியாயரும் மாணவர்களும் ஒன்று சேர்ந்து அந்தஸ்து பார்க்காமல் அத்தோட்டத்தில் வேலை செய்யவேண்டும். இது போலவே, கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர், கிராமத்தச்சன், கொல்லன், கருமான், தட்டான் இவர்களைக் கொண்டு அவர்களின் தொழில்களில் யாணவர்களுக்கு போதனைகளை நடத்தி வைக்க வேண்டும்.

கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் மாணவர்களுக்கு எருத்தமைச் செடிகளையும், காய்கறிச் செடிகளையும், புஷ்பச் செடிகளையும், பயிர் செய்வதில் ருசியை அதிகமாகப் புகட்ட வேண்டும். அவர் பத்திரிகைகளிலும், ஸர்க்காருடைய துண்டுப் பிரகடனங்களிலும் பிரசுரிக்கப்பட்டு வரும்; நவீன முறைகளை கிராம ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். அம்முறைகளை கிராமத்திலுள்ள சிறந்த வியவஸாயியைக் கொண்டு நிரூபணஞ் செய்யவேண்டும்.

கிராமப்பள்ளிக்கூடங்களில் போதனை காலம் கிராம ஜனங்களின் சௌகரியங்களிற் கேற்றவாறே அமைக்கப்பட வேண்டும் பஜனைகள் நடத்தப்பட வேண்டும். பள்ளிக்கூடங்களில் கிராம ஜனங்களுக்கு வர்த்தமான பத்திரிகைகளும், வியவஸாய, கூட்டுறவு இலாகாக்களின் துண்டுப் பிரகடனங்களும் படித்துக் காட்டப்பட வேண்டும். சிக்கன வாழ்க்கையும், மதுவிலக்கு விஷயமும் போதிக்கப்பட வேண்டும். தீண்டாமை என்பது ஒழிக்கப் பட வேண்டும். கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் கிராமத்தாரைப் பழைய ஸமூக வாழ்விலும் பஞ்சாயத்து வழிகளிலும் அமைத்து அவர்கள் ஒவ்வொருவரும் கிராம முன்னேற்றத்தில் கருத்தை வஹிக்கும்படிச் செய்ய வேண்டும்.

## கிராம ஜனங்களிற்குக் கல்வி முறை.

[ஒரு உபாத்தியாயரால் எழுதப்பட்டது.]

கல்வி விஷயச் சீர்திருத்தத்திற்காக ஸைமன் கமிஷன் ஒருவன் சபையை நியமித்திருந்ததென்று எல்லோரும் அறிவார்கள். அச்ச

பை விசாரணைகளை நடத்தியதில் இந்தியாவில் கல்வி சம்பந்தமாகச் செய்யப்படும் செலவுகள் பயனற்றவைகளாய் வீண் செலவாகின்றனவென்று அதற்குத் தோன்றியவாம். ஆரம்பக்கல்வி முறை விஷயமாக நமது கவர்மெண்டின் நோக்கமானது, நம்முடைய தேசத்தில் கிராம ஜனங்கள் தேறுதல்களில் தங்களுடைய வாக்குரிமையைச் சரியாய்ச் செலுத்த வேண்டிய நிமித்தம் கல்வியை யடைய வேண்டுமென்பது. ஆனால், ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கணக்கில்லாமல் ஏற்பட்டு வருகையில் ஜனங்கள் தக்கபடி கல்வியை யடைந்தவர்களாக ஏற்படுகிறதில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அப்பள்ளிக்கூடங்களில் மாணவர்களாகச் செல்வோரில் பத்தில் ஒருவர் கூட நாலாவது வகுப்பு வரையில் படிக்கிறதில்லை. மேற்கூறிய சபையார் கவர்மெண்டில் கல்விமந்திரிகளே. மாஹாணக்கல்வி முயர்சிகளை அதிகமாக கவனித்து வரவேண்டுமென்றும், தறபோதில் போல கல்வி விஷயம் ஜில்லா போர்டுகளிடத்திலும் யூனியனகளிடத்திலுமே அடியோடு விட்டு விடப்படக் கூடாதென்றும் அபிப்பிராயப் படுகிறதாக காணப்படுகிறது. இவ்வபிப்பிராயம் சரியானதாக நமக்குத் தோன்றவில்லை. முனிஸிபாலிடிகளும், லோகல் போர்டுகளும், பஞ்சாயத்துகளும் கல்வி விஷயத்தில் அதிகமாகப்பாடுபட வேண்டும். கிராம ஜனங்கள் கல்வியை யடைந்து விவேகிகளாவதற்கு அவைகளையே உத்திரவாதம் வஹிக்கும்படிச் செய்யவேண்டும். கல்வி முறை கிராம ஜனங்களிற் கேற்றதாகவும் அவர்களுக்கு வாழ்வில் உபயோகப் படக்கூடியதாகவு மிருக்க வேண்டும். அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிய வேண்டியதோடு வியவஸாய விழிகளிலும் பஞ்சாயத்து, கூட்டுறவு, சமூக வாழ்வு வழிகளிலும், ஸஹாயத்தொழில் வழிகளிலும் போதனைகள் நடத்தப்படவேண்டும். கிராமப் பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிடுகிற கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களும் அப்பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்களும் கிராம வாழ்வில் ருசியுள்ளவர்களாகவிருக்கவேண்டும். கிராம வாஸத்தில் பட்டண வாஸத்தில் போல் உபாத்தியாயர்களுக்கு அதிக ஆசை இருக்க மாட்டாதாகையால் கிராமப்பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு பட்டணப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களை விட அதிகச் சம்பளமும், சௌகரியங்களும் ஏற்படவேண்டும்.



# மனதின் நிலையும் நோயும்.

[ஓர் சிறந்த டாக்டரின் உபந்நியாஸத்தின் சுருக்கம்.]

மனோ நிலையில் ஏதாவது மாறுதல் ஏற்படுமாகில் இரைப்பையில் கோளாறுகள் ஏற்படும். ஆகாரத்தில் ஈ உட்கார்ந்தால் எத்தனையோ பெயர்கள் வாந்தி யெடுக்கிறார்கள். தூசிதும்பு இருந்தால் அருவருப்பு உண்டாகிறது. பயமிருந்தால் ஆகாரத்தை அது தள்ளி விடுகிறது. ஆகாரம் தயாரிக்கப்பட்டதில் அசுத்தம் அநுஷ்டிக்கப் பட்டதாகத் தெரிந்தாலும் அநேகர் அதைப் புசிக்கிறதில்லை. அதை அவர்கள் அரைமனதுடன் புசித்தாலும் அது அவர்களுக்கு ஜீரணமாகிரதில்லை. சந்தோஷமான ஹிருதயம் மருந்தைப்போல நலத்தைத் தரக்கூடியது. ஆயுள் முழுவதும் கவனிக்க வேண்டிய முக்கிய விதி யாதெனில் நம்முடைய உணவைச் சந்தோஷமாய் உண்ணவேண்டியதே. சந்தோஷமும், மனக்களிப்பும் சாப்பிடும் போதிருந்தால் அவை இனிப்பையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். நன்றாய் சமைப்பவன் தான் அவன் செய்யும் குழம்பினால் பசியை உண்டாககுகிறான். சந்தோஷமான மனதானது தேகத்தைச் சரியான நிலையில் வைக்கும் பொருட்டு ஜீரணக்கருவிகளுக்கு உதவியாய் நிற்கின்றது. சந்தோஷமில்லாமல் எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிற மனது இரைப்பை, குடல் இவைகளில் நோய்களை உண்டுபண்ணும்.

காமக்குரோதாதிகளை அடிக்கடி அடையாத அமைதியான மனது ஆரோக்கியத்தை அதிகமாக வஹிக்கும். நல்ல மனதை யுடையவர்கள் சண்டைச் சச்சரவுகளையும் கோபதாபங்களையும் தீர்ப்பார்கள். மனது அமைதியாக விருந்தால் சரீரத்தில் பல அவயவங்களும் ஒழுங்காக வேலை செய்து ஆரோக்கியத்தை விளக்கும். நோயாளி கவலையற்றவனாய்ச் சந்தோஷ மனதுடனிருந்தால் நோய் சீக்கிரத்தில் தீர்ந்துவிடும். நோயாளி மனக்கவலையுடனிருந்தால் அவனுக்கு எவ்வளவு திறமான சிகித்சை அநுஷ்டிக்கப்பட்டாலும் சீக்கிரத்தில் நோய் தீராது. இன்னும் அநேக ஜனங்கள் அவர்களுடைய வீடுகளில் யாராவது கடு நோயால் கஷ்டப்படும் பொழுது வைத்தியர் வந்து பார்த்தால் அவரை நோயாளிக் கெதிரிலேயே நோய் தீருமாவென்று கேள்க்கிறார்கள். இவ்வித கேழ்வை நோயாளி மனதில் பதிவதால் அவன் திகிலையடைகிறான். நோய் தீர்கிறதில்லை.

# கிராமச்சீரமைப்பு சம்பந்தமாக மஹாத்மா காந்தி அவர்கள் கூறியிருப்பது.

மஹாத்மா காந்தி அவர்கள் பஞ்சாபில் கிர்காம் கிராம முன்னேற்ற முயர்ச்சிகளை நடத்திய மிஸ்டர் பிரெயின் எழுதியுள்ள "இந்திய கிராமங்களைச்சரியான ஒழுங்கில் அமைத்தல்" என்கிற புத்தகத்தை வாஸித்துத் தன்னுடைய அபிப்பிராயங்களை "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதியிருக்கிறார். கிராமங்களில் மிஸ்டர் பிரெயினால் கண்டறியப்பட்ட சீர் கேடுகளாவன:— (1) குடியானவர்களின் ஒழுங்கில்லாத பயிர் முயர்ச்சிகள், (2) கிராமங்கள் அசுத்தமாயிருப்பதும், குடியானவர்கள் எப்பொழுதும் அசுத்த ஸ்தலங்களில் வாஸஞ் செய்து கொண்டு நோய்களை அடைவதும்; (3) கிராம ஜனங்கள் எப்பொழுதும் வாந்தி பேதி, அம்மை முதலிய கொடிய நோய்களை அடைவது; (4) குடியானவர்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தை வீண்சிலவு செய்வது; (5) கிராம ஜனங்கள் பெண்பிள்ளைகளை ஈன அந்தஸ்திலும், அடிமைத்தனத்திலும் வைப்பது; (6) கிராம ஜனங்கள் தங்களுடைய வீடுகளையும் குடும்பங்களையும் கவனியாமலிருப்பதும், தங்களையும், தங்களுடைய வாஸஸ்தலங்களையும் சீர்திருத்தி உயர்த்திக் கொள்ள மனமில்லாமலிருப்பதும், (7) கிராம ஜனங்களுடைய அவிவேகமும், அவர்கள் அந்நிய நாடுகளின் வர்த்தமானங்களை அறியாமலிருப்பதும்

இந்திய வியவஸாயின் வியவஸாய வழிகள் ஒழுங்கற்றவைகளல்லவென்றும், அதே அபிப்பிராயத்தைப் பல அந்நிய தேச நிபுணர்களும் கொண்டிருக்கிறார்களென்றும், இந்திய வியவஸாயிகளுச் சேமித்து வைக்கப் பணமேயில்லாமலிருக்கையில் அவன் பணத்தையெல்லாம் வீண் சிலவு செய்கிறான் என்பது தப்பான வார்த்தையென்றும், மஹாத்மா காந்தியவர்கள் இவை சம்பந்தமாகக் கூறுகிறார்,

மேற் கூறிய சீர்கேடுகளை யொழுங்கு படுத்துவதற்கு மிஸ்டர் பிரேயின் சிற்சில யோசனைகளை அப்புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். அவையாவன:— "(1) குடியானவர்கள் நல்ல மாடுகளை வைத்துக் கொள்ள வேண்டும்; (2) நவீன பயிர்க் கருவிகளை அவர்கள் உபயோகிக்க வேண்டும்; (3) நல்ல விரைகளை உபயோகிக்க வேண்டும்; (4) நிலத்தில் குழிகளை வெட்டி எருவைக் கொட்டி வைக்க வேண்டும்; (5) சாணியை எரி முட்டைகளாகச் செய்யக்கூடாது; (6) கிராம



பாங்கிகளைக் குடியானவர்கள் உபயோகிக்க வேண்டும்; (7) மழை ஜலம் சேதமாகாதபடி வயல்களை மட்டத்திற் கேற்ற படிச் சதுரங்களாகப் பாகித்து அவைகளுக்குக்கரைகளைப் போட வேண்டும்; (8) விருக்ஷங்களை வளர்த்து வர வேண்டும்; (9) மாடுகளுக்கு கொடிய நோய்கள் வராமலிருப்பதற்கு அவைகளுக்கு அம்மை குத்த வேண்டும்; (10) தானியங்களை அழிக்கிற எலிகளையும் முள்ளம் பன்றி முதலியவைகளையும், சொல்லவேண்டும்; (11) மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்; (12) மேய்ச்சலுக்காக ஒவ்வொருவரும் அவர்களுடைய பாதி நிலங்களை அமைக்க வேண்டும்; (13) வாய்க்கால்களை ஒழுங்காய் வெட்டி சுத்தமாக வைக்கவேண்டும்; (14) துண்டு நிலங்களை ஒரே ஸ்தலமாகச் செய்து கொள்ளவேண்டும்.

இவைகளைப்பற்றி அபிப்பிராயங் கொடுக்கையில் மஹாத்மாஜீயவர்கள் வியவஸாயிகள் நவீனக் கருவிகளை உபயோகிக்க வேண்டுமென்பது அவசியமானதல்லவென்று கூறியிருக்கிறார்.

மிஸ்டர் பிரெயின், கிராமச் சுகாதார நிலையை இவ்வாறு கூறுகிறார். கிராமத்திற்குள்ளும், சுற்றிலும், குப்பை மேடுகளும், நரகல்களும், நிறைந்திருக்கின்றன. அவைகள் காற்றினாலும், மனிதர்களினும் மிருகங்களினும் சஞ்சாரத்தினாலும், வீசப்பட்டுச் சிதரப்பட்டு மனிதர்களின் ஆஹாரத்திலும், பானத்திலும் அடைந்து அவைகளில் நோய் மூலங்களை உண்டாக்குகின்றன; மேலும், அவைகள் மனிதர்களின் கண்களிலும், மூக்குகளிலும் புகுந்து இன்னும் பல கொடிய நோய்களையும் உண்டாக்குகின்றன. மனிதர்களுடைய வீடுகளில் காற்றோட்டமில்லை. வீடுகளைக் காற்றோட்ட மிருக்கும்படி கட்டி அமைக்க வேண்டும்.

மிஸ்டர் பிரெயின் பெண் பிள்ளைகளின் நிலையை இவ்விதமாக விவரிக்கிறார்:—கிராமத்தான் தன் மனைவி பிரஸவிக்கும் காலத்தில் அவளுக்குக் காற்றில்லாத ஒரு இருட்டு அறையைக் கொடுக்கிறான். பிரஸவத்திற்கு ஒத்தாசையைச் செய்வதற்குப் பெருக்கிறவன் மனைவியை வரவழைக்கிறான். கிராமத்தான் தன் பிள்ளைகளையும், பெண்களையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும். அவர்கள் கல்வியைக் கற்க வேண்டும். ஆனால் அக்கல்வி அவர்கள் செய்ய வேண்டிய தொழில்களுக்கும் வியவஸாய முயர்ச்சிகளுக்கும், வாழ்விற்கும் ஏற்றதாயிருக்கவேண்டும்.

மேற்கூறிய யோசனைகளெல்லாம் வெகு சிறந்தவை. மஹாத்மா காந்

தியவர்களும் அவைகளை மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்கிறார். நம்முடைய மாஹாணத்திலும் கிராம நிலைமை மேற்கூறியவாறே இருக்கிறது. கிராமச் சீரமைப்பு ஊழியர்களும் கிராமப் பஞ்சாயத்துகளும் பாரெஸ்டு பஞ்சாயத்துகளும் இவ்விஷயங்களை நன்றாய்க் கவனித்துத் தக்க முயர்ச்சிகளைக் கைக்கொள்ள வேண்டும்.

—(o)—

# அலுமினியமும் அதன் தீமையும்

## மட்பாண்டத்தின் மாட்சி

[டாக்டர், எம். மாசிலாமணி முதலியார்.]

அலுமினியம் என்னும் ஓர் வித உலோகம் நம் நாட்டில் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த உலோகத்தால் சமையல் செய்வதற் குரிய சகல பாத்திரங்களும் தயார் செய்யப்பட்டு மக்களால் கையாளப்பட்டு வருகின்றன வென்பது உலகறிந்தது. மற்ற உலோகங்களாகிய பாத்திரங்களைக் காட்டிலும் அலுமினிய சாமான்கள் இலேசாகவும், நயமாகவும் இருப்பதால் மக்கள் அவற்றை உபயோகிக்க ஆரம்பித்தார்களே யன்றி அவற்றாலுண்டாகும் நன்மை தீமைகளை ஆராய்ந்துணர்ந்து உபயோகபடுத்துகின்றார்களில்லை. அலுமினியப் பாத்திரங்களில் தயாரிக்கப்படுவனவும், வழங்கப்படுவனவுமான ஆகாராதிகளை உட்கொண்டோர் சதா காலமும் வயிற்றுவலி, அஜீரணம் முதலிய வியாதிகளால் பீடிக்கப்பட்ட போதிலும், அவ்வியாதிகட்குக் காரணம் அலுமினியப் பாத்திரங்களென்றுணராமல் அடிக்கடி ஔஷதங்களை உபயோகிக்கின்றனர்.

அலுமினியம் என்ற உலோகமானது உப்பு, புளி ஆகிய இவற்றின் சம்பந்தத்தால் கறையக் கூடிய தன்மையுடையது. உதாரணமாக ஓர் அலுமினியப் பாத்திரத்தில் உப்புக்கல் ஒன்றைப் போட்டுச் சற்றுநேரம் கழித்துப் பார்த்தால் அப் பாத்திரத்தில் உப்புப் பட்ட இடத்தில் துவார முண்டாவதைக் காணலாம். உப்பு, புளி ஆகியவற்றால் பாகஞ் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை அலுமினியப் பாத்திரத்தின் மூலம் உபயோகித்தால், அவ்வுணவு வகைகளோடு மேற்படி உலோகத்தின் சத்தாகிய நஞ்சு கலப்பதால் அவற்றை உண்டோர் நாளடைவில் நோய்களை அடைகிறார்கள்.



வெகுசாய் அலுமினியப் பாத்திரங்களை உபயோகிக்கும் வீடுகளிலேயே வாந்தி, வயிற்று வலி முதலிய நோய்கள் அடிக்கடி உண்டாவதைக் காணலாம். நம் நாட்டு மாதர்கள் அலுமினியப் பாத்திரங்களா லாகும் அவதிகளை அறியாமல் குறைந்த விலையையும், அழகையும், பளுவின்மையையும் கருதி அவற்றை ஆசையோடு வாங்குகின்றார்களே யன்றி வேறன்று. எனவே அத்தகையவர்கட்கு அலுமினியத்தின் தீமைகளையும், அவற்றால் மக்களுக்குண்டாகும் நோய்களையும் எடுத்துக்காட்டி அவர்களை அலுமினியப் பாத்திரத்தை வாங்கி உபயோகிக்காதவாறு செய்ய வேண்டு மென்று இக் கட்டுரையை வாசிக்கும் அன்பர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

பண்டைக் காலத்தில் நம் நாட்டிலே மட்பாத்திரங்களையே அனைவரும் கையாண்டு வந்தார்கள். சிலர் பாத்திரம் கற்பாத்திரத்தை உபயோகித்தனர். ஆதலால் நோயற்றுத் திடசரீரிகளாய் நெடு நாள் வாழ்ந்திருந்தனர். அத்தகையோர் யாதேனும் விசேஷம் நடக்கும் வீடுகளுக்குச் சென்றால், அவ் வீடு ளில் பெருங் கூட்டத்தினர்க்கு மட் பாத்திரங்களில் பாகஞ் செய்வதாலேற்படும் சிரமத்தை நினைத்து செப்புப் பாத்திரங்களில் உணவுகளைத் தயார் செய்வார்களாயின் அவற்றை உட்கொண்டால் வயிற்று வலி உண்டாகுமெனக் கருதி போஜனம் புசியாது போவது வழக்கமாயிருந்தது. பின்னர்ச் சிறிது சிறிதாகச் செப்புப்பாத்திரங்களில் தயார் செய்த பதார்த்தங்களைச் சாப்பிடப் பழகிவிட்டார்கள். செப்புப் பாத்திரத்திற் செய்தவற்றை உண்பதால், உஷ்ண சம்பந்தமான வியாதிகள் உடலில் பரவு மென்பதை அறவே மறந்தார்கள். மற்றுஞ் சிலர் நாகரீகத்தை மேற்கொண்டு உடலுக்கு ஒவ்வாத உலோகப் பாத்திரங்களில் தயாரிக்கப் பட்ட பாகங்களை உட்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இக்காலத்திலும் வீரவைஷ்ணவர்களும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களும் மட்பாத்திரங்களை உபயோகித்து வருவதைப் பார்க்கலாம். அவர்கள் செய்கை பாராட்டற் குறியது. தாழ்த்தப் பட்ட மக்களும், மற்ற ஜனங்களும் தங்கள் வறுமையின் காரணத்தால் இன்றளவும் மட்பாத்திரங்களையே பெரிதும் உபயோகித்து வருகின்றனர். எனினும், அவர்கள் வறுமையின் காரணத்தால் வகித்துள்ள அம் முறையானது மேலான விதியென அவர்களுக்குப் போதித்து, அவர்கள் எக்காரணங் கொண்டும் உலோகப் பாத்திரங்களை உணவுப் பொருள்களைத் தயார் செய்ய உபயோகப்

படுத்தாத வாறு எச்சரிக்கை செய்ய வேண்டுமாய் வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் உட்கொள்ளும் தண்ணீரைக் கூட மட்பாத்திரத்தில் வைத்தல் நலமாகும். இன்றேல் சுத்தமான ஜலத்தை அருந்த இயலாது. உலோகப் பாத்திரங்களில் ஜலத்தை வைத்தால், ஜலத்தில் கலந்துள்ள அழுக்கு, மண் முதலிய பொருள்கள் ஜலத்தின் மேலேயே மிதக்கும், ஆனால், மட்பாத்திரமோ நீரிலுள்ள அழுக்குகளை இழுத்துக் கொண்டு ஜலத்தைச் சுத்தமாக்கும். ஆகையால் அலுமினியம் முதலிய உலோகப் பாத்திரங்களில் தண்ணீர் வைத்தலாகாதென்பதை அனைவரும் அறிய விரும்புகிறேன்.

பெண்களின் அஜாக்ரதையால் சிலர் உலோகப் பாத்திரங்களை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிற தென்றாலும், அத்தகையோர் கற்பாண்டங்களை உபயோகிக்கலாமன்றோ? பெருந்தொகையானவர்களுக்குச் சமயல் செய்யுங் காலங்களில் மட்டும் ஈயம் பூசிய செப்புப் பாத்திரங்களை விதியின்றி உபயோகித்தலாற் பாதகமில்லை. பித்தளைப் பாத்திரங்களையும், அலுமினியப் பாத்திரங்களையும் மக்கள் அறவே நீக்க வேண்டும். மட்பாண்டங்கள் மட்டுமே மாசற்றன; "உடலுக் குறுதி பயப்பன" என்பதை மறக்கலாகாது. இதனைக் கண்ணுறும் நண்பர்கள் தாமும் பயன் படுதலோடு பிறர்க்கும் பயன் படுத்துவாரென நம்புகின்றேன்.

# அஜீர்ணத்திற்குக் காரணம்.

நமது தேகத்தில் ஜீர்ணக் கருவிகள் சூக்ஷ்மமானவைகள். அவைகளை ஓயாமல் வேலை செய்யும்படிச் செய்வதால்தான் ஜனங்களுக்கு அன்ன துவேஷம் என்கிற கொடிய நோய் ஏற்படுகிறது. நாம் எல்லோரும் வேலை செய்த பின்பு இளைப்பாறுகிறோம், உறங்குகிறோம், மறுபடியும் விழித்துக்கொண்டு வேலை செய்கிறோம். நம்முடைய தேகத்தில் ஹிருதயம் சற்று துடிக்கிறது, சற்று ஓய்கிறது, திரும்பி துடிக்கிறது. அதன் துடிக்கிற கால மொத்த அளவைக் காட்டிலும் அதன் ஓய்வு கால மொத்த அளவு அதிகமாக விருக்கிறது. நாம் வேலை செய்கிற கால அளவைவிட நாம் இளைப்பாறித் தூங்கும் கால அளவு அதிகமாக விருக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்போலவே நம்முடைய ஜீர்ணக் கருவிகளுக்கும் வேலை செய்த பின் அதிக ஓய்வு காலம் வேண்டும். நாம் சாப்பிட்ட உடனே நம்முடைய இரைப்பை வேலை செய்ய ஆரம்பிக்கிறது. 3, 4 மணி நேரத்திற்குள் அது சாப்பாட்டை நன்றாய் மசித்துப் பாயஸமாக்கி விடுகிறது. அக்காரணத்தினால் தான் இரைப்பையை அநேகர் ஜீர்ண இயந்திரம் என்று கூறுகிறார்கள். இரைப்பை இவ்வேலையை வெகு தீவரமாய்ச் செய்யும் பொழுது நாம் அதைத் தொந்திரவு செய்யாமலிருக்க வேண்டும்.



உணவு இரைப்பையால் நன்றாய் மசிக்கப் பட்ட பிறகு அவ்வங்கத்தின் அடியிலுள்ள துவாரம் திறந்து கொள்கிறது. மசிந்த பாயஸம் போலாயிருக்கிற உணவு அதன் வழியாகக் குடலுக்குச் செலுத்தப் படுகிறது. இரைப்பையானது இவ்வுணவைக் குடலுக்குச் செலுத்துவதற்குத் தன் சுவர்களை அடிக்கடி பல தடவை குறுக்கி விரிக்கிறது. உணவு முற்றிலும் குடலில் இவ்விதமாகச் செலுத்தப் பட்ட பின்பு இரைப்பை அசைவற்று இளைப்பாற ஆரம்பிக்கிறது. இளைப்பாறிய பிறகு மறுபடியும் அது வேலை செய்கிறது. ஹிருதயத்தின் ஓய்வு காலங்கள் ஒரு வினாடிக்கு மேலில்லை. இரைப்பையின் இளைப்பாறுங் காலம் 3, 4, மணி நேரமாக விருக்கிறது.

இரைப்பைக்கு உணவை மசித்துக் கடைந்து விடுவதற்கு 3, 4 மணி காலம் ஆகிறது. ஆகவே, அது இளைப்பாறுவதற்கு 3, 4 மணி காலமாவது வேண்டும். இப்படி 3, 4 மணிகள் வரையில் அது இளைப்பாறுவதற்குள் மனிதர்கள் ஏதாவது அல்பத் தீனியைக் கூடப் புசித்தாலும் இரைப்பையின் சுவஸ்திதிக்கு இடையூறுண்டாகும். இங்கிலாந்தில் விக்டோரியா மாஹா இராணியாரின் காலத்தில் பெண்பிள்ளைகள் காலை டீயிக்கும், காலை போஜனத்திற்கும் இடையில் சிற்றுண்டிகளைப் புஜித்து வந்தார்கள். தற்போதில் அவ்வழக்கம் நின்று போய் விட்டது. சிறு பெண்கள் இப்பொழுது அந்த தேசத்தில் கொடிபோன்ற உருவத்துடனும் நல்ல ஆரோக்கிய ஸ்திதியிலுமிருக்கிறார்கள்.

நம்முடைய தேசத்தில் ஜனங்கள் ஓயாமல் எதையாவது வாயில் போட்டுக்கொண்டு அசை போடுகிற வழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

குழந்தைகளுக்கு அவர்கள் கேட்கும் போதெல்லாம் மிட்டாய்களையும் பக்ஷணங்களையும் கொடுக்கிற வழக்கமும் நிற்க வேண்டும். நமது மாஹாணத்தில் காபி ஹோடல்கள் விபரீதமாகக் கிளம்பியிருக்கிற காரணம் பற்றி நமது ஜனங்கள்—முக்கியமாய்த் தமிழ் தேச ஜனங்கள்—அவைகளுள், பசியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்

199389

சரி, ஒரு நாளைக்குப் பலதடவை நுழைந்து நுழைந்து வருகிறார்கள். இவ்வழக்கத்தாலேயே நம்முடைய மாஹாணத்தில் அநேகர் இரைப்பை நோய்களால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## காது.

காது மிக உணர்ச்சியுள்ளது. நமக்குத் தெரிகிற மேல் காதானது சப்தத்தை ஒன்று திரட்டி உள்ளே செலுத்துகிறது. சப்தம் செலுத்தப்படும் வழி சுழன்றிருக்கிறது. உள்ளே இருக்கும் குரும்பியால் தூசி, பூச்சிகள் உள்ளே வராதபடி தடுக்கப் படுகிறது. மேற்சொல்லிய வழியின் கோடியில் டிரம் என்று சொல்லப் பட்ட அழுத்தமாய்ப் பரவியுள்ள ஜவ்வு ஒன்றிருக்கிறது. டிரம்மிற்குக் கீழே தொண்டை வரையில் செல்கிற இன்னொரு பாதை இருக்கிறது. இப்பாதைக்குக் குறுக்காக மூன்று சின்ன எலும்புகள் ஒரு வாராவதி போல் அமைந்திருக்கின்றன. இதை நடுக்காது என்று சொல்வார்கள். இது உள் காதுடன் கலக்கிறது. உள காதில் மூளையிலிருந்து வரும் நரம்புகள் முடிவாகின்றன. இந்த நரம்புகள் தான் சிறு டெலிபோன் கம்பிகளைப் போல் மூளைக்கு சப்தத்தைக் கொண்டு போகின்றன. சப்தத்தின் அலைகள் மேல் காது வழியாகச் சென்று டிரம்மை அசைக்கின்றன. டிரம் அசைவதால் கீழேயிருக்கும் சிறு எலும்புகளும் அசைகின்றன. இவை மூலமாக சப்தம் செல்கிறது.

## தீர்க்காயுளையுடைய சன்னியாஸிகள்.

ஸஸெக்ஸைச் சேர்ந்த கௌபோல்டிலுள்ள கார்தூஸியன் பாதிரிகள், சாகபக்ஷிணிகள், மௌனிகள், 80, 90 வயது வரையில் சக்தியுடன் ஜீவித்திருக்கிறார்கள். அவர்கள் உடை தரிக்கிறதில்லை. கடின வாழ்வையே நடத்துகிறார்கள். அவர்களுக்குப் படுக்கை பலகை தான்.

## பாலாறு.

“சென்ற 20 வருஷங்களாக பாலாற்றில் வெள்ளம் வராமல் இருப்பதற்கு என்ன காரணமென்று விசாரிப்பதற்காக வட ஆற்காடு செங்கற்பட்டு ஜில்லாக்களின் பிரதிநிதிகளாய் இச்சபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் மெம்பர்களும், அநுபவமுள்ள உத்தியோகஸ்தர்களும், ஒரு இஞ்சினீயரும், சேர்ந்த ஒரு கமிட்டியை நியமிக்கும்படி கவர்மெண்டாருக்கு இச்சபை சிபார்சு செய்கிறது” என்று சென்னை [illegible]ச்சட்ட ஸபையில் சென்ற ஸெப்டம்பர் 30உ ராவ்பஹதூர் எஸ். எல்லப்ப செட்டியார் ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். தீர்மானத்தைப் பிரரேபிக்கையில் அவர் சொன்னதாவது:- “பாலாற்றில் 1903ம் வரு வரையில் வெள்ளம் சரியாய் வந்து கொண்டிருந்தது; பிறகு 25 வருஷ காலமாய் அதில் ஜலமே வருகிறதில்லை. அதனால் அதைக்கொண்டு ஜலாதாரத்தையுடைய வாய்க்கால்களிலும் ஏரிகளிலும் தண்ணீர் கிடைக்கிறதில்லை. இக்கால்வாய்களையும் ஏரிகளையும் நம்பியிருந்த குடிகளின் நிலைமை எப்படியிருக்கும் என்பதை எல்லோரும் அறிந்து கொள்ளலாம். மழையின்மை ஒரு காரணமாகவிருந்த போதிலும் மற்றொரு காரணமுமிருக்கலாம். பாலாறானது மைசூர் இராஜ்ஜியத்தில் நந்தி மலையில் உற்பத்தியாகி அந்த இராஜ்ஜியத்திலேயே பல மைல்கள் ஓடி பிறகே வட ஆற்க்காட்டில் பிரவேசிக்கிறது. மைசூர் இராஜாங்கத்தார் சில புதிய பாய்ச்சலாதார திட்டங்களை ஏற்படுத்திப் பிரவாஹத்தைத் தடை செய்திருக்கலாம்.” இத்தீர்மானத்தை ஸ்ரீமான் டி. ஆதிநாராயணசெட்டியார் ஆமோதித்தார். ஆமோதிக்கையில், அவர் இவ்வாறு மொழிந்தார்: “நதிவளம் பொருந்திய பிரதேசங்களிலுள்ள, நாகரிகமும் வாய்ச்சாதுர்யமும் பெற்ற குடியானவர்களைப் போல் அல்லாமல் வட ஆற்காடு. செங்கற்பட்டுக் குடியானவர்கள் வாய் செத்தவர்களாயிருக்கிறார்கள். தஞ்சாவூருக்குக் காவேரி எப்படியோ, ஆந்திர தேசத்திற்கு கோதாவரி, கிருஷ்ணை எப்படியோ, அப்படிப் போலவே, வட ஆற்காடு செங்கற்பட்டு ஜில்லாக்களுக்குப் பாலாறு முக்கியமானது. பாலாறு மைசூர் இராஜ்ஜியத்தில் 6000 ஏகர்களுக்குப் பாய்ந்து அந்த இராஜ்ஜியத்திலேயே சில தொழில் ஸ்தாபன நகரங்களுக்கும் குடி தண்ணீருக்காகவும் உபயோகப்படுகிறது. பிறகு, வட ஆற்காடு ஜில்லாவிலும் செங்கற்பட்டு ஜில்லாவிலும் ஓடுகிறது. அதன் ஜலம் ஒரு துளிகூட சமுத்திரத்தையடையாமல் முழுவதும் பயிருக்கே உபயோகிக்க படுகிறது. வட ஆற்க்காட்டில் 5 தாலூக்காக்களும், செங்கற்பட்டில் 3ம், பாலாற்றையே பாய்ச்சலாதாரமாக நம்பியிருக்கின்றன. பாலாற்றுப் பாய்ச்சலாதார முறை மிக்கப் பெரியதும், நன்றாய் அமைக்கப்பட்டதுமாகும். அதில் 317 ஏரிகளும், வாய்க்கால்களும், பாய்ச்சலாதாரங்களாய் அமைக்கப்பட்டிருக்கின்றன, அவைகள் இலக்ஷ ரூபாய்த் தீர்வையுள்ள 75,078 ஏகர் நிலங்களுக்குப் பாய்கின்றன. ஆங்கில அரசாக்ஷிக்கு முன்னமேயே வட ஆற்க்காட்டின் 5 தாலூகாக்களுக்கும் ஊற்று வாய்க்கால்களைப் போட்டுக் கொள்ள மாமூல் நாமாக்கள் ஏற்பட்

டிருக்கின்றன. அவைகளின் சங்கியை 21. இந்த ஊற்றுக் கால்வாய்களின் ஆயக்கட்டோ 11,400 ஏகர்கள். பாலாற்றைக்கொண்டு நிறம்பும் ஏரிகளின் ஏற்பாடும் மிகச் சிறந்தது. அந்நீர் நிலைகளும் முக்கியமானவைகளாயிருக்கின்றன. 1913-ம் ௵ நவம்பர் 1௳ யுள்ள கவர்மெண்டு உத்திரவ 3165-இல் இப் பிரதேசத்தின் பொது வளம் வெகு உயர்வாக மதிக்கப்பட்டிருக்கிறது. 1903-ம் ௵த்திற்கு முன் பாய்ச்சலுக்காகக் கிடைத்த ஜலத்தின் புள்ளிகளைக் கொண்டே முந்திய தீர்வையை விட 100க்கு 25 அதிகத் தீர்வை மறு பைஸலில் கணக்கிடப் பட்டிருக்கிறது. பாலாற்றில் கடைசியாக 1903ம் ௵ நவம்பர் ௴ 11-ம் தேதிதான் வெள்ளம் வந்தது. அப்பொழுது வாணியம் பாடி வாராவதி உடைந்தது. வட ஆர்க்காட்டில் பிரவேசித்த பிறகு கீழ் மின்னலிலிருந்து இந்நதி மிகவும் விரிவாய் ஒரு பெரிய மணல்பிரதேசமாயிருக்கிறது. மேற்கூறிய கவர்மெண்டு உத்திரவில் பாய்ச்சல் ஆதாரங்களில் முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பு, எனப் பிரமாதமான விவரணங்கள் காணப் படுகின்றன. இப்பொழுது 15 வருஷங்களாக பாலாறு பெண்ணை இவைகளை ஆதாரமாய்க்கொண்ட எந்த ஏரியும் இந்த விவரணங்களுக்கு உட்பட்டு வராது. அப்படி யிருந்தும் உயர் தீர்வைகள் விதிக்கப்பட்டு அத்தீர்வைகள் 15 வருஷங்களாக வசூலிக்கப் பட்டு வருகின்றன. பாலாற்றில் வெள்ளம் வருவது நின்று போன படியாலேயே வட ஆர்க்காட்டிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் அந்நிய நாடுகளுக்குக் குடியேறி யிருக்கிறார்கள். வெல்லஸ்லி வாராவதியைக் கட்டுவதற்காக சென்னை கவர்மெண்டார் 20,000 ரூபாயைக் கொடுத்தார்கள். மைசூர் கவர்மெண்டார் பேதமங்கலம் ஏரியில் அநேக லக்ஷம் கன அடி ஜலம் தேங்கும்படி 18 அடி உயரத்திற்குக் கரையை உயர்த்தினார்கள். இது தவிர, சென்னை தென் மஹாராஷ்டிர ரெயில்வேயில் திருவலம், மெயில் பட்டி, ஜோலார் பேட்டை இவ்விடங்களில் நீரிறைக்கும் இயந்திரங்கள் ஏற்படுத்தப் பட்டமையால் அநேக மைல் தூரம் கீழ் நீர் வற்றுப் போயிற்று. கவர் மெண்டாரும் சமீப வருஷங்களில் எதிர் வாய் நிலங்களை அயனுக்கு மாற்றிய படியால் சாதாரணமாய் எல்லா ஜனங்களும் அடையக்கூடிய அநுகூலங்கள் சில குடிகளாலேயே அடையப்படுகின்றன. மைசூர் தர்பாரோடு பாலாறு விஷயமாய் கவர்மெண்டார் செய்து கொண்டிருக்கும் உடன் படிக்கைத் திருத்தப்பட வேண்டும். வட ஆர்க்காட்டு ஜனங்களுக்கு இப்போதாவது கவர்மெண்டார் நியாயம் செலுத்த வேண்டும்.''



கான் பஹதூர் அப்துல் ரஜாக்கு ஸாஹிப் பஹதூர் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். அவர்சொன்னதாவது: வட ஆர்க் காட்டில் தண்ணீரில்லாமல் போன படியால் வெகு காலத்துக்குத் தாங்கக் கூடிய தென்னை மரங்களும் கூட உலர்ந்து போகின்றன. நஞ்சை நிலங்கள் புஞ்சை சாகுபடிக்குக்கூட லாயக்கில்லாமல் போய் விட்டன. சென்னைக்குக் குடிநீரைக் கொடுக்கும் பொழலேரிக்கும் பாலாற்று வெள்ளத்தை நம்பியிருக்கிற காவேரிப்பாக்கம் ஏரியிலிருந்து ஜலம் வர வேண்டியிருக்கிறது. பெண்ணை ஆற்றைப் பலாறோடு கலக்கும் படியும் செய்யலாம்.

பிறகு அநேக மெம்பர்கள் பேசினார்கள். கடைசியில் தீர்மானம் நிறைவேறியது.

## பாரெஸ்டு பஞ்சாயத்துகள்

சென்னைச் சட்ட ஸபையில் கர்நூல் ஜில்லா பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக சில கேள்விகள் கேழ்க்கப்பட்டன: மிஸ்டர் ஜீ. ஹரி ஸர்வோத்தம ராவ் அவர்கள் கர்நூல் ஜில்லா கலெக்டருக்கு 1926ம் ௵ லிருந்து 1929 வரையில் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் எலெக்ஷன்களின் ஸம்பந்தமாக எத்தனை குறைப் பத்திரங்கள் வந்து சேர்ந்தன வென்றும், இதர விஷய சம்பந்தமாய் அவைகளிடமிருந்தே அவ்வருஷங்களிலேயே எத்தனை குறைப் பத்திரங்கள் வந்து சேர்ந்தன வென்றும், அக்குறைப்பத்திரங்களெல்லாம் யார் யார் இடத்திலிருந்து வந்தன வென்றும், அவ்விருவகைக் குறைப் பத்திரங்களிலும் ஒவ்வொன்றில் எத்தனை பத்திரங்களின் சம்பந்தமாக கலெக்டர் விசாரணைகளை நடத்தினாரென்றும், மற்றப் பத்திரங்களை அவர் என்ன செய்தாரென்றும் கேழ்விகளைக் கேட்டார். பதிலளிக்கையில் கவர்மெண்டார் தங்களுக்கு அவ்வகையில் செய்தி ஒன்றும் வரவில்லை யென்று மொழிந்தார்கள். சென்ற பாரெஸ்டுப் பஞ்சாயத்துக் கான்பரன்ஸில் டிப்டி தாசில்தார்கள் பாரெஸ்டுப் பஞ்சாயத்து எலெக்ஷன்களில் கலந்துகொண்டு வேலை செய்கிறார்களென்று பல அர்ஜிகள் அக்கிராஸனரா யிருந்த, ராவ் பகதூர், பி. முனிஸாமி நாயுடு அவர்களிடம் கொடுக்கப் பட்டன. கர்நூல் பஞ்சாயத்தார்களால் ஏதாவது கொடுக்கப்பட்டதா வென்பது தெரிய வில்லை. ராவ் பஹதூர் முனிஸாமி நாயுடு அவர்கள் குறை பத்திரங்களை கான்பரன்ஸிற்குவந்திருந்த பாரெஸ்டுப் பஞ்சாயத்து ஆபீசர் அவர்களிடம் கொடுத்தாரென்று தோன்றுகிறது. கவர்மெண்டார் அவைகளை அவ்வுத்தியோகஸ்தரிட மிருந்து பெற்றுக் கொள்ளக்கூடும்.

பஞ்சாயத்துக் குறைகள் சரியாக நமது பத்திரிகைக்குத் தெரியப் படுத்தப் படுகிறதில்லை. இடைவிடாமல் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளை இவ் விஷயமாகத் தூண்டி வருகிறோம். சிரத்தையையெடுத்துக்கொண்டு ஒரு பாரெஸ்டுப் பஞ்சாயத்துகூட நமது வேண்டுகோளைத் தக்கபடி கவனிக்க வில்லையென்பதைப் பற்றி விசனிக்கிறோம். பஞ்சாயத்துகள் குறைகளை நமக்குத் தெரிவித்தால் நாம் அவைகளைக் கவர்மெண்டாருக்குத் தெரிவித்து வாதித்து அவைகளின் நிமித்தம் தக்க உத்திரவுகளை வாங்கிக் கொடுக்க தயாராக விருக்கிறோம்.

நமது யூனியனில் மாஹாணத்திலுள்ள பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு பாடுபட வேண்டும். அதில் பங்குகளை இன்னும் அநேகம் பெயர்கள் எடுத்துக் கொள்ளாமலிருக்கிறார்கள். ஷேர் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இதர பஞ்சாயத்தார்களையும் தூண்டிச் சேரும்படிச் செய்ய வேண்டும்.

டிபாஸிட்கள் வருகிறதேயில்லை. அது என்ன காரணத்தினாலேயோ தெரியவில்லை. பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்கள் யூனியனை பாரெஸ்டுப் பஞ்சாயத்து பாங்காகப் பாவித்து ஆதரித்து, அதிலேயே டிபாஸிட்டுகளை வைக்க வேண்டுமென்கிற உணர்ச்சியுடன் இருக்க வேண்டும். டிபாஸிட்டுகளை முன் போல் அதில் வைப்பதில் பஞ்சாயத்தார்களுக்கு யாதொரு கலக்கமும் இருக்க வேண்டியதில்லை. யூனியனானது கம்பனி ஆக்டின் படி ரிஜிஸ்டராகி விட்டதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். டிபாஸிட் பணங்கள் சென்னையில் சிறந்த பாங்கியாகிய ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் வைக்கப் படுகின்றன. நமது கணக்குகள் சிறந்த ஆடிடர்களால் பரிசோதிக்கப் பட்டு வருகின்றன. டிபாஸிட்டுகளை முன் போல் எல்லா பாரெஸ்ட்டு பஞ்சாயத்துகளும் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம். இது விஷயமாகவும், மற்றெந்த விஷயமாகவும் உள்ள கஷ்டங்களையும், நிர்ப்பந்தங்களையும், விவரித்து, பஞ்சாயத்துகள் நமக்கு எழுதிக் கொண்டால் அவைகளைப் பற்றி கவர்மெண்டாருக்கும், அதிகாரிகளுக்கும், தெரிவித்து, அவைகளைத் தீர்க்க முன் வரத் தயாராக விருக்கிறோம். பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் டிப்டி தாசில்தார்களும், மேற்பார்வையிடுகிற டிவிஷனல் ஆபீசர்களும், நமது யூனியனை ஆதரித்து ஓங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.



பாரெஸ்டு பஞ்சாயத்துகளை மேற்பார்வையிடும் சில ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸர்களைப் போலல்லாமல் பஞ்சாயத்தார்களிடத்தில் குற்றங் கண்டு பிடிக்கிற சுவபாவத்துடனேயே யிருந்து வருவது விஸனிக்கத்தக்கது. அவர்களும் பஞ்சாயத்து ஆபீஸர்களைப் போலவே பஞ்சாயத்தார்களைச் சரியான வழியில் அமைத்து, பஞ்சாயத்துக் காடுகளை அவர்கள் நன்றாய்ப் பரிபாலித்து வரும்படிச் செய்விப்பது தங்களுடைய கடமையென்றும் உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்வோம். இன்னும் அவர்கள் மேற்பார்வை யென்றால் குற்றங்கண்டுபிடிக்கிற தன்று, என்றும் இலவச ஊழியர்களாயிருக்கிற பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் கிராம கணக்கர்களைப் போல் நடத்தப் படத் தக்கவர்களல்லவென்றும் நினைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்வோம். ரெவினியூ ஆபீஸர்கள் பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸர்களைப் போல் பஞ்சாயத்தார்களை ஆதரித்து, அவர்களுக்கு நற்புத்தி நல்யோஜனைகளைச் சொல்லி நடத்த வேண்டுமென்றும், பாரெஸ்டு பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களையும் அப்படியே நடந்து கொள்ளும்படி அவர்கள் உத்திரவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

பாரெஸ்டு பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்கள், காட்டுவளர்ப்பு, பாதுகாப்பு இவ்விஷயங்களில் பயிர்ச்சியை அடைய வேண்டும். விருக்ஷவகை ஞானம் கூட அநேகருக்குக் கிடையாது. அவர்கள் பஞ்சாயத்து பாரெஸ்டுகளில் கொஞ்ச காலமிருந்து, பயிர்ச்சியை அடைய வேண்டும். சிறந்த பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளிருக்கிறார்கள். அவர்கள் மூலமாய் இப்பயிர்ச்சி நடத்தப்பட வேண்டும்.

நமது மாஹாணத்தில் பஞ்சாயத்துக் காடுகளில் அடுப்பு விறகுக் கேற்ற விருக்ஷங்கள் பயிராக்கப்பட வேண்டுமென்று பலர் கூறுகிறார்கள். சென்னையிலும், நம்முடைய மாஹாணத்தில் இதர இடங்களிலும் சவுக்குத் தோட்டங்களில் இனி வெட்டுவதற்கு மரங்களே யில்லாமல் போய்விட்டன. அது காரணம் பற்றி விறகின் விலை ஒரு டன் 30 ரூபாயாக விருந்து வருகிறது. இனியாவது, நமது தேசத்தவர்கள் காலி நிலங்களில் விருக்ஷங்களைப் பயிர் செய்கிற வழக்கத்தைக் கைப்பற்றுவார்களா? கிராம முன்னேற்ற சம்மந்தமாய் பஞ்சாபில் மிஸ்டர் பிரெயின் சொல்லிய முக்கிய யோஜனைகளில் இது ஒன்று. மகாத்மா காந்தி யவர்களும் அதை ஆமோதித்திருக்கிறார்கள். பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் சவுக்கையும், இதர விறகு, விருக்ஷங்களையும், பயிர் செய்து வர வேண்டுமென்று கோருவோம்.

# கவிபாஸரின் ஸ்வப்ன வாஸவதத்தம்.

## ஓர் கதை.

[ம-ா-ா-ஸ்ரீ டி. வி. சுவாமிநாத ஐயர்.]

வெகு காலத்துக்கு முன் வத்ஸ தேயத்தில் பாண்டவ வம்ச அரசர்கள் அரசு புரிந்து வந்தார்கள். அவ்வரசர்களுள் உதயனனென்று வல்லமையிலும், புத்தியிலும், கீர்த்தி பெற்ற ஓர் அரசன் இருந்தான். அவனுடைய குணாதிசயங்களையும், பராக்கிரமத்தையும் கேள்விப்பட்ட இதர அரசர்கள், தங்களுடைய பெண்களை அவனுக்கே விவாஹஞ் செய்து கொடுக்க, நோக்கங் கொண்டார்கள். அவ்வரசர்களுள், உஜ்ஜயினி தேசத்து அரசனும், மகத தேசத்து அரசனும் அந்நோக்கத்தை அதிகமாக வஹித்தார்கள்.

இராஜ்ஜிய விஷய சம்பந்தமாக ஒரு ஸமயம் உதயனன் உஜ்ஜயினிக்குச் சென்ற பொழுது, அத்தேசத்து மன்னனாகிய மஹாஸேனன் அவனைக் கைதி செய்தான். உதயனன் வீணாகானத்தில் திறமையை வஹித்தபடியால் மஹாஸேனன் அவனைத் தன் பெண் வாஸவதத்தாவிற்கு அவ்வித்தையைக் கற்பிக்கும்படி உத்திரவிட்டான். உதயனன் கோஷவதி யென்கிற தன் வீணையை வாஸவதத்தாவிற்குக் கொடுத்து அவளுக்கு வீணாகானம் கற்பித்து வந்தான்.

வாஸவதத்தாவின் சோபை இணையற்றதாயிருந்தது. உதயனனும் உத்தம புருஷ இலக்ஷணங்களை வஹித்தான். ஆகவே, அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் இச்சித்துக் காதல் கொண்டு, உடனே தாமதமில்லாமலும், ஒருவருக்கும் தெரியாமலும், வத்ஸ தேசத்தின் பிரதான பட்டணமாகிய கௌஸாம்பியை அடைந்து அங்கே மணங் கொண்டார்கள். பிறகு, உதயனன் சிலகாலம் பகைவர் பயமில்லாமல் இராஜ்ஜிய பாரத்தை நடத்தி வந்தான். இப்படியிருக்கையில், அத்தேசத்தை அருணி யென்கிற அயல் தேசத்து மன்னன் தாக்கி வசப்படுத்திக் கொண்டான்.

வத்ஸ தேசத்திற்குக் கிழக்கில்தான் பிரஸித்தி பெற்ற மகத தேசமிருந்தது. தர்சகன் என்பவன் அப்பொழுது அதற்கு அரசனாக விருந்தான். அம்மன்னனுக்கு பத்மாவதி யென்கிற அழகிய ஸஹோதரி ஒருவள் இருந்தாள். மகத தேச ஜோதிடர்கள் அவள் உதயனனுக்கே மனைவியாவா ளென்று ஒரே வாக்காய்க் கூறி வந்தார்கள். இச் செய்தி உதயனனின் முக்கிய மந்திரியாகிய யௌகந்தராயணனுக்கு எட்டிற்று. யௌகந்தராயணன் உதயனனிடத்தில் வெகு பக்தியை வைத்துக்கொண்டு, அவனுடைய அபிவிருத்தியையே கருதி உழைத்து வந்தான். அவன் இராஜ தந்திரங்களில் நிபுணன். வத்ஸ தேசத்திற்கு இனி அருணி முதலிய பகைவர்களிடமிருந்து யாதொரு தொந்திரவும் ஏற்படக் கூடாதென்றும், உதயனனின் பலத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும், அவன் நோக்கங் கொண்டு அந்நோக்கங்களைச் சாதிப்பதற்கு உபாயங்களை தேடிக்கொண்டிருந்தான். இச்சந்தர்ப்பத்தில் சோதிடர்களின் மொழிவு அவன் காதிற் கெட்டிற்று. அது அவனுடைய நோக்கங்களிற்குச் சாதகமாயிருந்தது. பத்மாவதி உதயனனுக்கு மனைவியாகும் பக்ஷத்தில் மகத தேசத்தரசன் அவனுக்கு உதவி புரிவான் என்றும், உதயனன், மகத தேச ஸைன்னிய உதவியோடு, எதிரிகளை வென்று, பகைவர் பயமேயில்லாமல் வத்ஸதேச அரசனாக நிலை நிறுத்தப்படுவானென்றும், நினைத்தான். ஆன போதிலும், வாஸவதத்தாவை ஏற்கனவே உதயனன் மணங் கொண்டு வெகு சந்தோஷமாக விருந்து வந்த படியால் அவனுக்கு மற்றொரு விவாஹ யோசனையை அவன் சொல்லத் துணிய வில்லை. ஆயினும், யௌகந்தராயணன் தன் யோசனையிலிருந்து மாறாமலேயிருந்தான். ஆகவே, வாஸவதத்தாவையும், ஸேனாதிபதி ருமன்வானையும், தன் சொற்படி நடந்து கொள்ளும்படிச் செய்து அவர்களிடத்தில் தான் எடுத்துக் கொள்ளப் போகிற முயர்ச்சிகளைப் பற்றி வெகு ரஹஸியமாய்ச் சொன்னான்

அருணியினிடம் தோல்வியை யடைந்த பிறகு உதயனன் வாஸவதத்தாவுடன் லவணாகாவில், வஸித்து வந்தான். அந்த காலத்தில் அவன் அடிக்கடி வேட்டைக்குப் போவது வழக்கமா யிருந்தது. ஆகவே, யௌகந்தராயணன் பின் கூறிய உபாயத்தை நடத்த உத்தேசித்து, அதைப் பற்றி ருமன்வானுக்கும், இராணி வாஸவதத்தாவிற்கும், தெரிவித்து விட்டு, சன்னியாசி வேடம் பூண்டு, வாஸவதத்தாவையும் மாறு வேடம் போட்டழைத்துக் கொண்டு லவணாகாவை விட்டு வெளிக் கிளம்பினான். அரசன் வேட்டைக்காகப் போயிருக்கிற ஸமயத்தில் லவணாகாவிற்குத் தீவைக்கும் படிக்கும், அரசன் வேட்டையிலிருந்து திரும்பி வந்ததும், லவணாகா தீயால் எரிந்து போயிற்றென்றும் இராணி வாஸவதத்தாவும், யௌகந்தராயணனும் அத்தீயில் மாண்டார்களென்றும் பயிரங்கமாய்த் தண்டோராப் போடும்படி ருமன்வானுக்கு உத்திரவிட்டுச் சென்றான். ருமன்வான், பிரதான மந்திரியின் சொற்படியே நடந்தான். அரசன் வேட்டையி

லிருந்து திரும்பி வந்ததும் இச் செய்திகளைக் கேட்டு நீங்காத சோகத்தை யடைந்தான்.

யௌகந்தராயணன், லவணகாவை விட்டு புறப்படும் பொழுது அரசனைப் பாதுகாக்கும்படியும், இராஜ்ஜிய பரிபாலன வேலையைச்சரியாய்ப் பார்க்கும் படியும், ருமன்வானைக் கேட்டுக் கொண்டான். வாஸவதத்தாவுடன் செல்லுகையில் தான் உஜ்ஜயினியிலிருந்து வந்த ஸன்னியாஸி யென்றும், கூட வரப்பட்ட பெண் கணவனால் நிர்கதியாய் விடப்பட்ட தன் ஸஹோதரியென்றும், சொல்லிக்கொண்டு மகத தேச மார்க்கமாய்ச் சென்று, இராஜக் கிரஹத்தின் அருகிலுள்ள காடுகளை அடைந்தான். அக்காட்டில் ஒரு ஆச்ரமத்தில் மகத தேசப்துத் தாய் இராணியானவள் தன் கணவன் இறந்த பிறகு வந்து சேர்ந்து, உலக வாழ்க்கையை விட்டு விட்டு, தவம் செய்து வந்தாள். யௌகந்தராயணன் அக்காட்டை அடைந்த தினமே, தர்சகனின் ஸஹோதரியாகிய பத்மாவதி, தன் அன்னையை தரிசித்தும் ஆசீர்வாதத்தை பெறுவதன் நிமித்தம், இராஜ பிருதுகளோடு, அக்காட்டிற்கு, வந்துசேர்ந்தாள். காட்டை அடைந்த உடனே இராஜ குமாரி காட்டிலிருந்தவர்களுக்கு அவர்கள் கேட்பதை யெல்லாம் கொடுப்பதாக தன்னுடைய உத்தியோகஸ்தர்களைப் பகிரங்கமாகச் சொல்லச்சொன்னான். இதைக் கேட்ட யௌகந்தராயணன் தாமத மில்லாமல் ஆச்ரமத்தை அடைந்து, அங்கிருந்த பிரதான உத்தியோகஸ்தனிடத்தில் தன்னுடைய வேண்டுகோளை வணக்கமாய்க் கூறினான். அவ்வேண்டுகோளென்ன வென்றால், தான் தீர்த்த யாத்திரைக்குப் போக உத்தேசித்திருப்பதால் தான் யாத்திரையிலிருந்து திரும்பி வருகிறவரையில் இராஜ குமாரி யானவள் வாஸவதத்தாவைத் தன்னிடம் வைத்துக் கொண்டு ஸம்ரக்ஷிக்க வேண்டு மென்பது. உத்தியோகஸ்தன் இவ்வேண்டுகோளை இராஜ குமாரியினிடம் தெரிவித்தான். இராஜ குமாரி அவ்வேண்டு கோளுக்கிணங்கி வாஸதத்தாவை அழைத்து வைத்துக் கொண்டாள். பத்மாவதி வாஸவதத்தாவின் ரூபத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டு அவள் ஒரு உயர் குலப் பெண்ணாகத்தானிருக்க வேண்டு மென்றுணர்ந்து, அவளை வெகுப் பிரியமாகவும், உபசாரணைகளுடனும், நடத்தி வந்தாள். வாஸவதத்தாவும், பத்மாவதியினிடத்தில், நன்றி பாராட்டி, வெகு பக்தியுடன் நடந்து வந்தாள்.

பத்மாவதியானவள், வாஸவதத்தாவைப் பாதுகாத்து வைத்துக் கொள்வதாக யௌகந்தராயணனுக்கு வாக்களித்த சற்று நேரத்திற்கெல்லாம் லவணகாவிலிருந்து, ஒரு வித்தியார்த்தி, இராஜ குமாரியி



னிடம் வந்து சேர்ந்து லவணகா தீயால் அழிக்கப் பட்டதையும், இராணி வாஸவதத்தா தீயில் மாண்டதையும், வாஸவதத்தாவைத் தன் உயிருக்குச் சமானமாக வைத்திருந்த அரசன், உதயனன் சோகமடைந்து ஊரைவிட்டுப் போனதையும், விவரித்தான். அரசன் உதயனன், இராணி வாஸவதத்தாவினிடத்தில் வைத்திருந்த ஆசையைப்பற்றி அவ்வித்தியார்த்தி விவரிக்கையில், பத்மாவதிக்கு உதயனன் பேரில் ஆசையும், ஆதரவும், ஏற்பட ஆரம்பித்தன. இவ்வாறு இராஜ குமாரியின் முன்னிலையில் சொல்லி விட்டு வித்தியார்த்தி புறப்பட்டுச் சென்றான். அவன் பின்னரே யௌகந்தராயணனும் தன்னுடைய நோக்கம் நன்றாய்ப் பயன் படுமாறு ஆலோசனைகளைச் செய்து கொண்டு சென்றான். வாஸவதத்தாவும் பத்மாவதியும், இராஜக்கிருஹத்தைப் போய்ச் சேர்ந்தார்கள்.

வாஸவதத்தா இறந்து விட்டாளென்று சோகத்தில் முழுகியிருந்த உதயணன் வாழ்விலேயே பிரியமில்லாமல் இருந்தான். ஆகவே, புனர் விவாஹஞ்செய்து கொள்ளும்படி அவனுக்கு யோசனை சொல்ல ஒருவரும் முன் வர வில்லை. ஆனபோதிலும், கொஞ்ச காலமான பிறகு, அவன், அரசியல் விஷயமாக மகத தேசத்திற்குப் போயிருந்த பொழுது, தர்சகனும், பத்மாவதியின் இதர உரவினர்களும், அவனை பத்மாவதியை மணஞ்செய்து கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டதின் பேரில், அவன், தன்னுடைய தீர்மானத்தை மாற்றிக்கொண்டு, அவர்களின் வேண்டு கோளுக்கு இணங்கினான். பத்மாவதி உதயனனுக்கே மனைவியாக வேண்டு மென்ற நோக்கம் இராஜக் கிருஹத்தின் அரண்மனையில் எல்லோருக்கும் வெகு நாட்களாயிருந்தது. பத்மாவதியும் அவனைத் தவிர வேறொருவனையும் மணஞ் செய்து கொள்கிறதில்லை என்ற பிரதிக்ஞையை வஹித்தாள். வாஸவதத்தாவிற்கு இச்செய்தி மனதைக் கஷ்டப்படுத்திய போதிலும், அவள் கணவனின் சுகத்தையும், அபிவிருத்தியையுமே கோறிக் கொண்டிருந்த படியால், அவள், அவ்வருத்தத்தை அதிகமாகப் பாராட்டவில்லை.

பத்மாவதியின் விவாஹத்திற்காக முயர்ச்சிகள் அதி விரைவில் நடை பெற்றன; முஹூர்த்தம் வைக்கப் பட்டது. கல்லியாண தினம் வந்து விட்டது. அக்காலத்தில் கல்யாண மண மாலையானது அப்பெண்ணின் முக்கியத் தோழியால் தொடுக்கப் படுவது வழக்கமாயிருந்தது. அதுகாரணம் பற்றி வாஸவதத்தாவே அம்மாலையைத்தொடுத்தாள். விவாஹம் வெகு நன்றாய் நடத்தப்பட்டது. பத்மாவதியை

விவாஹஞ்செய்துகொண்டு உதயனன் கொஞ்ச காலம் வெகு சந்தோஷமா யிருந்தான்.

ஒருநாள் பத்மாவதி அரசனைத் தன் உத்தியான வனத்தை வந்து பார்க்கும்படிக் கேட்டுக் கொண்டாள். அரசன் அவ்விடத்திற்கு வருவதற்கு சற்றுமுன்னமே அவள் தன்தோழி வாஸவதத்தாவுடன் அவ்விடம் சென்று அவளுடன் ஸம்பாஷித்துக் கொண்டிருந்தான். உதயனன் அவள் மனதிற்கேற்றவனா யிருக்கிறானா என்று வாஸவதத்தா பத்மாவதியை கேட்டாள். அதற்குப் பத்மாவதி தனக்கு என்ன பதில் சொல்கிற தென்று தெரிய வில்லை யென்றும், ஆனால் தான் அவனைவிட்டு க்ஷணங்கூடப் பிரிந்திருக்க ஸம்மதிக்க மாட்டாள் என்றும் பதில்மொழி கூறினாள். பிறகு, வாஸவதத்தாவிற்கும் அவன் அம்மாதிரியே தானே யிருந்திருக்க வேண்டுமென்று பத்மாவதிவினவிய பொழுது மாறுவேடம் போட்டிருந்த தோழி வாஸவதத்தாவிற்கு உதயனன் பதின் மடங்கு அதிகமாய்ப் பிரியனாக விருந்தா னென்று பதிலளித்தாள். உதயனனிடத்திலிருந்து ஏன் அவளும் வீணைகானத்தைக் கற்றுக்கொள்ள கூடாதென்று பத்மாவதி தன் தாதியால் கேட்கப்பட்ட பொழுது தான் உதயனனை அப்படியே கேட்டதாகவும் அதன் பேரில் அவன் பதில் மொழியாமல் விஸனமடைந்தா னென்றும் அவள் கூறினாள். வாஸவதத்தா இவ்வார்த்தைகளைக்கேட்டபின்பு தாங்கமாட்டாதவிஸனத்தைஅடைந்தாள். இப்படி இருவரும் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அரசன்விதூஷகனோடு அங்கே வந்துசேர்ந்தான். வாஸவதத்தா பத்மாவதியை விட்டு விட்டு ஒரு லதாகிருஹத்தில் போயிருந்து கொண்டு தன் கணவனைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அரசன் விதூஷகனிடத்தில் வாஸவதத்தாவின் ரூபத்தைப்பற்றியும், குணங்களைப் பற்றியும், வர்ணிப்பதை அவள் உற்றுக் கேட்டு கண்ணீர் விட்டாள். ஆனபோதிலும், அரசன் பத்மாவதியுடன் உல்லாசமாயிருப்பதற்குத் தான் அவ்விட மிருந்தால் ஏதாவது அசௌகரியம் நேரிடுமோ வென்று பயந்து அவள் உத்தியான வனத்தை விட்டுப் புறப்பட்டுப் போனாள்.

இப்படி இருக்கையில் ஒரு நாளிரவில் பத்மாவதி தேக அசௌக்கியமாய் இருக்கையில் அவளைப் பார்க்க அரசன் விதூஷகன் சகிதமாய் உத்தியானவனத்திற்கு வந்தான். வந்தபொழுது அவன் பத்மாவதியைப் படுக்கையில் காணவில்லை. ஆதலால் அவன் அவள்வரவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தான். பொழுதுபோக்குவதற்காக விதூஷகன் உஜ்ஜெயினிவிஷயங்களைச்சொல்ல ஆரம்பித்தான். அரசனுக்கு வாஸவ



தத்தாவின் நினைவு வந்து அவன் விஸனமடைந்ததால் அவ் வார்த்தைகளை விதூஷகன் நிருத்தினான். பிறகு, உதயனன் உறங்கத் தொடங்கினான். விதூஷகனும் உத்தியான வனத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான்.

பிறகு நோயால்த் தொந்திரவு படும் இராணியைப் பார்க்கவேண்டுமென்று வாஸவதத்தா உத்தியான வனத்திற்குச் சென்று படுக்கையின் பக்கத்தில் உட்கார்ந்தாள். அப்பொழுது உதயனன் வாஸவதத்தாவைக் கனவு கண்டு அவளுடன் ஸம்பாஷித்துக் கொண்டிருந்தான். கனவில் வாஸவதத்தாவை அவன் விஸனத்தோடிருப்பதாகக் கண்டு வினவவே பக்கத்திலிருந்த வாஸவதத்தா உதயனன் தான் படுத்திருக்கிறானென்பதை அறிந்து அவனுடைய கனவுப் பிதற்றல்களுக்குப் பதிலளிக்கத் தொடங்கினாள். கனவு கண்டு கொண்டிருந்த உதயனன் உடனே தன் கைகளை நீட்டவே, யௌகந்தராயணனின் முயர்ச்சிகளுக்கு எங்கே ஏதாவது பங்கம் வருமோ வென்று பயந்த வாஸவதத்தா உடனே உத்தியான வனத்தைவிட்டு வெகு விரைவில்ச் சென்றாள். உதயனனும் பாதி தூக்கத்துடன் எழுந்து கதவுவரையில் சென்று பார்க்கும் பொழுது வாஸவதத்தாவின் உருவம் வெகு வேகமாய்ச் செல்வதாகக் கண்டான். ஆயினும், தான்பார்த்தது நிஜவாஸவதத்தா தானோ அல்லது கனவு காக்ஷியோ வென்று அவனுக்குப் புலப்படவில்லை.

இராஜக் கிருஹத்தில் பத்மாவதியுடன் சில காலம் கழித்த பின் மகத தேசத்து ஸைன்னிய உதவியைப் பெற்று அருணையைத் தாக்கித் தோற்கடித்து விட்டு ஜெய பேரிகைகளுடன் உதயனன் தன் நகரை வந்து சேர்ந்தான். ஒரு நாள் அரண்மனையில் தானிருக்கும் போது தெருவில் யாரோ ஒருவன் வீணா கானம் செய்து வந்தான். வீணையின் தொனி தன் கோஷவதியினது போலவே இருந்தபடியால் அவ்வழிப் போக்கனைக் கூப்பிட்டு அவ்வீணையைப் பற்றி வினவினான். வழிப்போக்கன் அவ்வீணை முன் காட்டில்கிடந்த தென்றும் அதைத் தான் எடுத்து உபயோகித்து வருவதாகவும் சொன்னான். அரசன் வீணையை வாங்கிக் கொண்டு வாஸவதத்தாவை நினைத்து நினைத்து அதை உபயோகித்து வந்தான்.

உதயனன் வாஸவதத்தாவோடு உஜ்ஜெயினியை விட்டு வெளிக்கிளம்பிய பிறகு மஹாஸேனனும் அவனுடைய இராணியும் விஸனிக்கவில்லை. ஏனென்றால் உதயனனை வாஸவதத்தாவிற்குக் கணவனாக்க வேண்டுமென்றே அவர்கள் அவனைச் சிறைப்படுத்தி வாஸவ

தத்தாவிற்கு வீணைகனம் கற்பிக்கும்படி உத்திர விட்டார்கள். அவர்கள் உதயனனும் வாஸவதத்தாவும் மணஞ் செய்து கொண்ட செய்தியைக் கேட்டு அவர்களின் உருவப்படங்களைத் தயாரித்து அவைகளுக்கு உஜ்ஜெயினில் விவாஹ மகோற்சவங்களை நடத்தினார்கள். பிறகு வாஸவதத்தா தீயில் மாண்டாளென்றே நினைத்து அவர்கள் விஸனமடைந்தார்கள். ஆனபோதிலும் உதயனனின் பேரில் எப்பொழுதும் அவர்கள் அன்புபாராட்டி வந்தமையால் அவர்கள் உதயனனின் வெற்றியைக் கேட்டு சந்தோஷ மடைந்தார்கள். மேலும் அவனுக்குத் தூதர்களை யநுப்பித் தங்களுடைய சந்தோஷத்தைத் தெரியப்படுத்தினார்கள். இது தவிர தூதர்களிடத்தில் மேற்கூறியப் படங்களைக் கொடுத்து அவைகளை உதயனனிடம் சேர்ப்பிக்கும் படிச்சொல்லி அவைகளுக்கு நடத்திய விவாக மகோற்சவத்தையும் அவனிடம் விவரிக்கச் சொன்னார்கள். தூதர்கள் தங்களுடைய அரசனும் அரசியும் இட்ட கட்டளைகளை நடத்தினார்கள். அவர்கள் உதயனனை பேட்டி கண்டு படங்களைக் கொடுக்கையில் பத்மாவதி அவனுடன் இருந்தாள். அவள் வாஸவதத்தாவின் படத்தை யுற்றுப்பார்த்தாள். அது தன் தோழியினது போலவே யிருந்தது. ஆகையால் அவள் அரசனுக்குத் தான் கண்ட அதிசயத்தைச் சொன்னாள். அரசனும் ஆச்சரியமடையவே பத்மாவதி தன்தோழியை அரசன் முன்னிலையில் வர வழித்தாள்; இருவரும் அவளுடைய ரூபத்தை பெண் படத்தின் ரூபத்துடன் ஒத்திட்டுப் பார்த்தார்கள். அரசனுக்குப் பத்மாவதியின் தோழி வாஸவதத்தாவே யென்று தோன்றியது. இப்படியிருக்கையில் யாத்திரைக்குச் சென்ற சந்யாஸி தன் சகோதரியைத் தன்னிடத்தில் ஒப்பிவிக்கும்படக் கேட்க வந்தான். ஸந்நியாஸி வேடம் பூண்டவன் யௌகந்த ராயணனென்றும் ஏற்பட்டது. யௌகந்த ராயணன் நடந்த விஷயங்களை எல்லாம் உதயனனுக்கு விவரித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அரசன் யௌகாந்த ராயணனின் இராஜ தந்திரத்தைப் பற்றி வேகு சந்தோஷப்பட்டான் பிறகு கொஞ்ச நாட்களான பிறகு உதயனன் பத்மாவதியுடனும், வாஸவத்தாவுடனும் உஜ்ஜெயினிக்கு போய் நடந்த விருத்தாந்தங்களை மகாசேனனுக்கும் அவன் மனைவியாருக்கும் சொன்னான். அவர்களும் அளவில்லாத சந்தோஷத்தை யடைந்தனர்.

பிறகு வெகு வெகு காலம் வரையில் உதயனன் தன் மனைவியார்களுடன் வெகு சந்தோஷமாய் வாழ்ந்தான். வாஸவதத்தாவும், பத்மாவதியும் ஒற்று நடந்து கொண்டு அரசனின் வாழ்வைச் சிறப்பித்தார்கள்.



# வர்த்தமானக் குறிப்பு.

நமது மாஹாணத்திற்கு கவர்னராக வந்திருக்கிற சிறப்பு வாய்ந்த மஹாகனம் பொருந்திய ஸர். ஜார்ஜ் பிரெடரிக் ஸ்டான்லி அவர்களுக்கு பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சார்பில் நாம் வணக்கமாய் நன்கு வரவையளிக்கிறோம்.

---

சென்னை நகர பரிபாலன சபைக்கு ம-ா-ா-ஸ்ரீ ஏ. இராமஸ்வாமி முதலியார் அவர்கள் தலைமை ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ம-ா-ா-ஸ்ரீ முதலியார் அவர்கள் வெகு திறமாக ஏற்கனவே சென்னை நகர பரிபாலனத்தை நடத்தி வந்திருக்கிறார். அவர் சிறந்த புத்திமான். சிறந்த ஜனத்தலைவர். சென்னைச் சுகாதார நிலை இன்னும் சரியாக அமையவில்லை வைத்திய சௌகரியம் பல பாகங்களில் சரியாயில்லை. டிஸ்பென்ஸரிகளும், மருத்துவ ஸஹாய ஸென்டர்களும், ஏழை ஜனங்களும், ஆதி திராவிடர்களும், வாஸஞ் செய்யும் அடையார் போன்ற இடங்களில் அமையவேயில்லை. கார்பொரேஷன் பள்ளிக்கூடங்களின் ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு, உடை ஸஹாயங்களும் அமைய வேண்டும். ம-ா-ா-ஸ்ரீ இராமஸ்வாமி முதலியார் அவர்கள் இவ்விஷயங்களைக் கவனிப்பாரென்று நம்புகிறோம்.

---

சென்னை கிரந்த வாசகசாலை சங்கத்தார் பூந்தமல்லியில் கிராமக் கிரந்த வாஸிப்பு சௌகரிய முயர்ச்சிகளைத் தொடங்கினார்கள். இதலி தேசத்தில் கிரந்தசாலை இயக்கம் நன்றாய் நடந்து வருகிறது.

நமதுதேசத்திலும், புதுக்கோட்டை, பரோடா, இச்சமஸ்தானங்களில் இவ்வியக்கம் நடை பெறுகிறது. பாரெஸ்டு பஞ்சாயத்துகளும், கிராம பஞ்சாயத்துகளும், தங்களுடைய கிராமங்களில் கிரந்த வாசகசாலைகளை அமைக்க வேண்டுமென்று கோறுகிறோம். மிஸ்டர் ஹீட் மாஹாண பாங்கிங்கு கம்மிட்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டபடியால் கூட்டுறவு சங்க ரிஜிஸ்டிரார் வேலைக்கு மிஸ்டர், டி. என் ஸ்டிராதி நியமிக்கப் பட்டார். மிஸ்டர் ஸ்டிராதி செங்கல்பட்டு ஜில்லா கலெக்டராகவிருந்து கிராம முன்னேற்ற விஷயமாய் வெகு உயர்வான வேலைகளைச் செய்திருக்கிறாராகையால் கூட்டுறவு இலாகாவிலும் அவர் அவ்விதமாகவே உழைத்துக் கீர்த்தி பெறுவாரென்பதில் சந்தேக மில்லை.

இராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் இணையற்ற

தர்ம கைங்கரியங்களை உத்தேசித்து சென்னை நேபியர் பார்க்கில் ஒரு பெரிய தியேடரும், ஹாலும் கட்டப்படுமாம். சென்னை நகர பரிபாலன ஸபையார் அக்கட்டிடத்தை நேபியர் பார்க்கில் கட்டுவதற்கு வெகு சந்தோஷத்துடன் அநுமதி கொடுத்திருக்கிறார்கள். இராஜா அண்ணாமலை பல்லாண்டு பல்லாண்டாக வாழ்வாராக.

---

சிறப்பு வாய்ந்த இர்வின் பிரபு கொல்ஹாபூரில் நவம்பர் மாதம் 19உ யன்று அச்சமஸ்தானத்தின் தாய் மஹாராணியாரின் உருவச் சிலையைத் திறந்தார். பிறகு பம்பாயின் மாஜி கவர்னராகிய ஸர். லெஸ்லி வில்ஸனின் சிலையையும் திறந்தார். வியவஸாயப் பொருள் காக்ஷிசாலை ஒன்று மஹாராஜாவினால் அவ்வூரில் கட்டப் பட்டிருக்கிறது. அதையும் இராஜப்பிரதிநிதி அவர்கள் திறந்தார். வியவஸாயப் பெருள்க் காக்ஷிசாலையைத் திறக்கும் போது அவர் உபந்நியஸிக்கையில் அச்சமஸ்தானத்தில் காடுகள் நன்றாய் வளர்க்கப்பட்டு வருவதைப் பற்றி வெகு நன்றாய் புகழ்ந்து பேசினார்.

---

அமெரிக்காவிலிருந்து டாக்டர், கே. எல். பட்டர் பீல்டு என்கிற கிராம முன்னேற்ற விஷய நிபுணர் நமது தேசத்திற்கு வரப்போகிறார். டாக்டர் பட்டர்பீல்டு மிச்சிகானில் வியவஸாய கலாசாலையின் தலைவர். ஐக்கிய நாடுகளின் மாஜி பிரஸிடெண்டாகிய ரூஸ்வெல்டு அவரை அந்நாடுகளின் கிராம முன்னேற்ற விஷய ஆராய்ச்சி சபைக்குத் தலைவராக நியமித்தார்.

லேடி ஸைமன் அவர்கள் அபிஸ்ஸீனியா, சீனா, அரேபியா, இத்தேசங்களில் அடிமைகள் இன்னுமிருக்கிறார்களென்றும் அவர்களுடைய நிலையும் இன்னும் ஆதிகாலத்தில் போலவே தானிருக்கிறதென்றும் ஓர் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். ஸர் ஜான் ஸைமன் அப்புத்தகத்திற்கு முகவுரையை எழுதுகையில் தற்கால ஜனங்கள் வில்பர்போர்ஸ் செய்த வேலையைப்பூர்த்தி செய்ய வேண்டுமென்று எழுதுகிறார்.

---

பார்ஸிகாரர்களுக்குள் தீண்டாவகுப்பு ஒன்றிருக்கிறது. அவ்வகுப்பினர்கள் நசிசலர் என்று வழங்குகிறார்கள். அவர்கள் தான் பார்சிகாரர்களுக்குப் பிணந்தூக்குகிறர்கள். இவர்களைப் பார்ஸிகாரர்கள் தங்களுடைய கோயில்களுக்குள் வர விடுகிறதில்லை. அவர்களைத் தங்களோடு பந்திகளில் உட்கார வைத்துச் சாப்பாடு போடுகிறதுமில்லை.



# மதிப்புரை.

சுகாதாரப் பாடங்கள். ஸெகண்டிரிப் பள்ளிக்கூடங்களில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது பாரங்களில் உபயோகத்திற்காக. வீரவநல்லூர் இந்து ஸெகண்டரி பாடசாலையில் உதவி உபாத்தியாயராகிய எம். எஸ். சுப்பிரமண்யன் அவர்களால் எழுதப் பட்டது. எ. ஆர். வி. பிரெஸ், திருவநந்தபுரம் 1929. இப்புத்தங்களில் பல பாகங்களைப் பார்வையிட்டோம். இவைகள் வகுப்புகளுக்கேற்றபடி தயாரிக்கப் பட்டிருக்கின்றன. கிரந்தாசிரியர் சுகாதார விஷயங்களையெல்லாம் தக்க உதாரணங்களுடனும், படங்களுடனும், மாணவர்களின் மனதில் பதியும்படி தெளிவாக எளிய நடையில் எழுதியிருக்கிறார். இவைகள் ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் போதனைக் கேற்றவைகளென்று நாம் உறுதியாகச் சொல்வோம்.

---

இராஜதரங்கிணி. காஸ்மீரமன்னரின் சரித்திரச் சுருக்கம் பகுதி I கல்ஹணகவி இயற்றிய வடமொழி நூலினின்றும் பண்டித சிரோமணி, வெ. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் எழுதப்பட்டது. எடியுகேஷனல் பப்ளிஷிங்கு கம்பனி, நுங்கம் பாக்கம், சென்னை, 1929. காஸ்மீரம் மஹாபாரத காலத்திலிருந்து சரித்திரத்தையுடையது. அத்தேச அரசர்கள் இந்து மத ஆசார விஷயங்களில் வெகு சிரத்தையை வஹித்தார்கள். அவர்கள் பல ஆலயங்களையும், மடங்களையும், தர்ம சாலைகளையும், அக்கிரஹாரங்களையும் கட்டி பரிபாலித்து வந்தார்கள். அநேகர் நல்லொழுக்கத்தையே பின்பற்றி, நீதியுடன் அரசாண்டிருக்கிறார்கள். காஸ்மீரம் இந்து மத சம்பந்தமாகவும், ஞான மார்க்க சம்பந்தமாகவும், விவேகத்திலும், நாகரீகத்திலும் உயர்வாகவே இருந்திருக்கிறது. வடமொழி காவியமாகிய இராஜ தரங்கிணியில் காஸ்மீர மன்னர்களின் சரித்திரம் மஹாகவி கல்ஹணரால் எழுதப் பட்டது. அது வடமொழிப் பயிர்ச்சி உள்ளவர்களால் கொண்டாடப் பட்டு மேநாட்டு பாஷைகளில்கூட மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. பண்டித சிரோமணி கிருஷ்ணமாசாரியார் அக்காவியத்தைச் சுருக்கமாய்த் தமிழ்ப்படுத்தி சரித்திர சம்பவங்களைப் பல உதாரணங்களோடும், வசனங்களோடும், உயர் தமிழில் வெகு ரஸமாய் வரைந்திருக்கிறார். கோனந்தனிலிருந்து ஹர்ஷதேவன் வரையில் 1000 வருஷங்களடங்கிய சரித்திரம் விவரிக்கப் பட்டிருக்கிறது. நமது தேசத்துப் பூர்வகால சரித்திரத்தைக் கற்றறிய முயல்வோர்க்கு இப்புத்தகம் வெகு முக்கியமானது. மேலும், ஹைஸ்கூல் மாணவர்களும் இதைப் படிக்க வேண்டுமென்றும் கூறுவோம்.

# யுனைடெட் நாஷனல் இன்ஷூரென்ஸ் கம்பெனி, லிமிடெட்:

தலைமை ஆபீஸ்: கராச்சி.

மூலதனம்:— ஒரு பங்கு ரூ 100 விகிதம் 5 லக்ஷம் ரூபாய்க்கு 5000 பங்குகளாக பகுக்கப்பட்டது.

ஒரு பங்குக்கு விண்ணப்பத்துடன் ரூ 10ம். பிற்பாடு தெரிவிக்கப்படும் போது ஒவ்வொரு தடவையும் ரூ 5 விகிதம் செலுத்த வேண்டியது.

தற்காலம் மஹாஜனங்கள் பங்குகள் எடுத்துக்கொள்ளலாம். ஹிந்து மாகாணத்தில் தற்போதுள்ள இன்ஷூரென்ஸ் கம்பெனிகளுள் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானது முதன்மையானதும் நம்முடைய கம்பெனியே குறிப்பு;— கம்பெனியின் முழுவிவரங்களடங்கிய ப்ராஸ்பெக்டஸ் வேண்டுமானல் கம்பெனி மானேஜர்களிடமிருந்தாவது "ஸெண்ட்ரல் பாங்க்-ஆப்-இந்தியா எந்த ஆபீஸிலிருந்தாவது பெற்றுக்கொள்ளலாம்.

மற்றவிவரங்கட்கு விலாஸம்:—

மானேஜிங் ஏஜண்டுகள்,  
தி. யுனைடெட் நாஷனல் இன்ஷூரென்ஸ் கம்பெனி லிமிடெட்,  
ட்ரீடீ ரோட், கராச்சி.


## நமது மாற்றுப் பத்திரிகைகள்

(தமிழ் பதிப்புகள்)

ஆனந்த போதினி: ஆனந்த குண போதினி: பாலவிநோதினி: பாரதி: சிந்தாமணி: ஏல விவசாயி: கிராமானுகூலம்: ஆரோக்கிய தீபிகை: இந்திய விவசாயம்: இந்தியன்: கம்மபாலன்: குமரன்: மாருதி: சென்னை கிராமபஞ்சாயத்து புல்லெடின்: ராமகிருஷ்ண விஜயம்: ஸ்வராஜ்யா (வாரப்பதிப்பு): தமிழ் நேசன்: விமோசனம்: யாதவ மித்திரன்: கலைமகள்: குடியரசு.




ரப்பர் ஸ்டாம்புகள்.

பதக்கங்கள் பரிசு பெற்றவை  
குறைந்த தொகை — — — சிறந்த  
வேலைப்பாடு திருப்திபெறுத்தும்.  
இல்லாவிடில் பணம் வாபீஸ்.  
கேடலாக் இலவசம்  
மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,  
தபால் பெட்டி 74. மதராஸ்.



RUBBER-STAMPS

—AWARDED MEDALS—  
LOWEST PRICES — BEST QUALITY  
SATISFACTION GUARANTEED  
OR YOUR MONEY BACK.  
CATALOGUE free.  
The Madras Rubber Stamp Mfg. Co.  
POST BOX 74, MADRAS.



రబ్బరు స్టాంపులు.

మెడల్సు పొందినవి.  
వెల సరసము పలమధికము.  
తృప్తికి మేము ఉత్తరవాదము,  
లేనియెడల మీసొమ్ము వాపసు.  
కేటలాగ్ ఉచితము.  
ది మద్రాసు రబ్బరు స్టాంపు కంపెని.  
తపాలు పెట్టె 74, మద్రాసు.



80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.




அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**  
**போஸ்டு பாக்ஸ் 140. மதுரை.**

80 வருஷகாலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசுநெய் மணம், குளிர்ந்த குணம், இன்புரும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இமையப் பெறறு நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனேபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமார்ந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புருங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல் நரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ 3-4-0

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனுல் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக் குத்தல் உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை | தபால் கூலி | பாக்கிங் | தொகை |
|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 9 0 | 0 4 0 | 0 1 0 | 0 14 0 |
| 6 புட்டி | 1 2 0 | 0 5 0 | 0 1 0 | 1 8 0 |
| 12 புட்டி | 2 4 0 | 0 8 0 | 0 1 0 | 2 13 0 |

# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம். கூட்டுறவு கிருஷிகர் செய்யக் கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள் முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர். இந்திய விவசாயம் ஆபீஸ்;

தெப்பக்குளம் போஸ்ட்; திருச்சினுப்பள்ளி.

---

## கம்ம பாலன்

பிரதி தமிழ் மாதக்கடைசியில் வெளிவரும் சிறந்த தமிழ்ப்பத்திரிகை. பத்திராதிபர்:— ஸ்ரீ ஆர். வேங்கடசாமி நாயுடு: வருடசந்தா தபாற்செலவுட்பட ரூபா ஒன்றுதான். விளம்பரவிகிதத்திற்கு மானேஜருக்குக் கெழுதுங்கள், மாதிரிக்காப்பி இலவசம், இன்றே எழுதுக. மானேஜர், கம்மபாலன் ஆபீஸ் திருத்தங்கல் Po. இராமநாதபுரம் ஜில்லா, (Ramnad Dist)

---

# கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபிவிருத்தியையும், பாஷாபி மானத்தையும் கருதியுழைக்கும் தேசிய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபாற் செலவுடன் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12· பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1. தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்;

64. முல்லாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.

---

நேர்த்தியான காயிதத்தில் குறைந்த சந்தாவில்

நல்ல பத்திரிகை! நவீன பத்திரிகை!!

## "தமிழ் நாட்டு மாடென் ரெவியூ"

என்று பல பத்திரிகைகளாலும் அறிஞர்களாலும்

புகழ்ப்பெற்ற உயர்ந்த மாதப் பத்திரிகை!!

# "பாரதி"

ஆசிரியர்:— ரா. நாராயணஸ்வாமி அவர்கள்

வருட சந்தா ரூ 2. அயல் நாடுகளுக்கு ரூ 2—8—0 அல்லது 4 ஷிலிங்

மனேஜர், "பாரதி" ஆலயம்,

உத்தம பாளையம், தென்னிந்தியா.

199384

---

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose**, M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவொருக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனமாக மருந்துபட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்னஸ்கிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்ப்பபை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2 50 டோஸ் ரூ 5

Regd. No. M 2475. DECEMBER Vol IV-12

அம்ருதாஞ்ஜன்

# 1930 காலண்டர்கள் 1930

கீர்த்தி பெற்றவர்களால்
ஸ்ரீ ஸீதா ராமன், மகாத்மா காந்தி,
ஒரு ஸ்த்ரீயின் படம் இவைகள் எழுதப்பட்ட
படங்களுடன் கூடியவை.

விலை

ஒன்று :— 0-2-0 டஜன் 1-4-0 100க்கு 9-12-0

(தபால் சார்ஜும் வேறு.)

குறிப்பு :—50 காலண்டர்களுக்கு மேற்பட்டு ஆர்டர் செய்வோர் பா... முன் பணமாக அனுப்பினால் நெருங்கிய ரயில் ஸ்டேஷனுக்கு பார்ஸல் அனுப்பப்படும்.

## அம்ருதாஞ்ஜனமே




எல்லா பிணிகளுக்கும்

புராதன மானதும், சிறந்த மருந்துமாகும்.

அம்ருதாஞ்ஜனம் டிபோ: பம்பாய்: மதறாஸ்.

Published by Mr. A. Rajagopala Reddi, President, Forest Panchayatdars' Union Ltd, Madras, & Printed At the Magazine Press, Chingleput.